Registered as a news paper.
பக்கங்கள்: பத்து + VI
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-754)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 01 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 11 (14.04.2003) திங்கட்கிழமை இதழ் :193

## விடுதலைப் புலிகளின் பங்கேற்பின்றி வொஷிங்ரன் மாநாடு இன்று ஆரம்பம்!

வொஷிங்ரனில் இன்று நடைபெறும் இலங்கை சம்பந்தமான திட்டமிடல் மாநாடு, மிக முக்கியமானதாக இருக்குமென்று உலகவங்கி அறிவித்திருக்கிறது.

இதேவேளை - நாட்டில் சமாதானத்தையும் பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளுக்கும், சர்வதேச சமூகம் பூரண ஆதரவு தெரிவித்துள்ளதென்று வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

வொஷிங்ரனில் மேற்கொள்ளும் தீர்மானங்கள் ரோக்கியோ கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும். பெற்றுக்கொள்ளப்படும் உதவிகள் இலங்கையில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு, புனரமைப்பு, நடவடிக்கைகளுக்கு உபயோகிக்கப்படும். 30 ஆயிரம் கோடி ரூபா நிதியுதவியை இலங்கை எதிர்பார்க்கிறதென வெளியுறவு அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ மேலும் தெரிவித்தார்.

இந்த மாநாட்டுக்கு அழைக்கப்படாமையைக் கண்டித்து - எதிர்ப்பை வெளிப்படுத்துமுகமாக, ஜப்பானில் நடக்கவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றுவது பற்றி மீள்பரிசீலனை செய்யப் போவதாக புலிகள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சித்திரைப் புத்தாண்டையொட்டி

## நகரில் நேற்று சனநெருக்கடி; திருட்டுகளுக்கு குறைவில்லை!

(யாழ்ப்பாணம்)

புத்தாண்டையொட்டி நேற்று யாழ்.நகரில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. சனநெருக்கடியைப் பயன்படுத்தி பல திருட்டுச்சம்பவங்களும் நேற்று நடந்தேறின.

புத்தாண்டுப் பொருள் கொள்வனவுக்காக வந்த சிலர், தமது உடைமைகள், பணத்தைத் தொலைத்துவிட்டு பரிதவித்து நின்றதைக் காணமுடிந்தது.

நகரில் நேற்று முழுநாளும் காணப்பட்ட சனநெருக்கடியினால் போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டிருந்தன. நகரின் முக்கிய சந்திகளில் பொலிஸார் வீதி ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.




## உள்ளூராட்சித் தேர்தல்கள் ஜூனில் நடக்க வாய்ப்பில்லை

### சட்ட நடைமுறைகள் காரணமாம்

(கொழும்பு)

**எதிர்வரும் ஜூன் மாதம் நடத்தப்படுவதாக இருக்கும் வட - கிழக்கு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல், சட்ட நடைமுறைகளால் பிற்போடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

ஜூனில் நடத்தப்படவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கு, புதிதாக வேட்பு மனுக்களைக் கோருவதென அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால், ஜூனுக்கு முன்னர் - அதற்குப் போதிய கால அவகாசம் இல்லாததாலேயே தேர்தல்கள் பிற்போடப்படும் எனத் தெரியவருகிறது.

அடுத்த மாதமே நாடாளுமன்றக் கூட்டத்தில் புதிய வேட்பு மனுக்கள் கோருவது பற்றிய சட்ட மூலம் ஏற்றுக்கொள்ளப்படவிருப்பதால், அது நடைமுறைக்கு வர குறைந்தது ஆறு வாரங்கள் தேவை.

எனவே, எதிர்வரும் ஜூன் மாதம் தேர்தல் நடத்துவதற்கு வாய்ப்பில்லை எனவும், இதனால் உள்ளூராட்சித் தேர்தல்கள் பிற்போடப்படலாம் என்றும் தெரியவருகிறது.

### விண்ணாணம் விநாசியர்



ஆக்களும் வார்த்தையளும் தடம்புரளக்குள்ள ரயிலுக்கு மட்டும் என்ன விதிவிலக்கே...?

## ரயில் தடம்புரண்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு வந்த தபால் புகையிரதம், நேற்றுக்காலை தடம்புரண்டது.

இந்தப் பாதையை உடனடியாக பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக புகையிரதத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## வெளிநாட்டு மீனவர்களைத் தடுக்க புதிய வழிகாட்டு முறைகள் தயாரிப்பு

சட்ட விரோதமாக வெளிநாட்டவர்கள் மீன்பிடித்தலில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கான புதிய வழிகாட்டு நெறிமுறைகளை, சட்டமா அதிபர் கமல சபேசன் அனைத்துப் பொலிஸ்மா அதிபர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

இதுவரைகாலமும் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்கும் சட்டவிரோத மீன்பிடிப்படகுகளைப் பிடிப்பதில் பல பிரச்சினைகள் இருந்து வந்தன. கைது செய்யும் வெளிநாட்டவர்கள் அத்துமீறியது தொடர்பான ஆதாரங்களைச் சமர்ப்பிக்கவேண்டியிருந்ததிலும் சிக்கல்கள் இருந்தன.

இதனால், புதிய வழிகாட்டு முறைகள் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதுடன், கைதாகும் இடத்தில் வைத்தே பதிவுகளை மேற்கொள்வது குறித்தும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## கடல் மோதல் தவிர்ப்பு யோசனை; விரைவில் பாதுகாப்பு அமைச்சருக்கு!

### கையளிக்கப்படும் என்கிறார் ஒஸ்ரின் பெர்ணான்டோ

கடற்பரப்பில் ஏற்படும் மோதல்களைத் தவிர்ப்பது தொடர்பான அறிக்கை, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடம் விரைவில் கையளிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

இந்த அறிக்கை பின்னர் கண்காணிப்புக்குழுவிடம் கையளிக்கப்பட்டு, அவர்களூடாகப் புலிகளுக்குக் கையளிக்கப்படும். இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்கள் பற்றி இப்போது வெளிப்படுத்தமாட்டேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அடுத்த சுற்றுப் பேச்சுக்களுக்கு முன்னர் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதையே தாம் விரும்புவதாகவும் ஒஸ்ரின் பெர்ணான்டோ மேலும் தெரிவித்தார்.

## மனித குளோனிங் முறைக்கு இலங்கை அரசும் தடைவிதிப்பு

குளோனிங் முறையை மேற்கொள்வதற்கான எந்த வசதிகளும் இங்கு அமைக்க இலங்கை அரசு அனுமதிக்காதென அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் தடைசெய்யப்பட்டுள்ள மனித குளோனிங் முறையில் மனிதனை உருவாக்குவது - இலங்கையிலும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. எவரும் மனித குளோனிங் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அண்மையில் மனித குளோனிங் மூலம் மூன்று குழந்தைகளைத் தோற்றுவித்த ரெயிலியன் அமைப்பு, தனது தளமொன்றை இலங்கையில் அமைக்கவுள்ளதாக அறிவித்ததைத் தொடர்ந்தே, அரசின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ரெயிலியன் அமைப்பு - இலங்கைக்கு வந்துள்ளதாக எவ்வித தகவலும் கிடைக்கவில்லையெனவும், அந்த அமைப்பு இலங்கையில் எந்த வித தளவசதியையும் கொண்டிருக்கவில்லையெனவும் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.





**பக்தாத்தில் அரச நிறுவனங்களில் நடைபெறும் சூறையாடல்களின் உச்சக்கட்டமாக, ஈராக் பொலிஸ் நிலையம் ஒன்றிலிருந்து கனரகத் துப்பாக்கியை ஈராக்கிய யுவதி ஒருவர் திருடிச்செல்வதை முதலாவது படத்திலும், ஈராக்கியப் படையினர் கைவிட்டுச் சென்றுள்ள - தரையிலிருந்து தரைக்கு ஏவப்படும் நெடுந்தூர ஏவுகணையான சாம் ரக ஏவுகணையை இரண்டாவது படத்திலும் காணலாம்.**

## ஐ.நா. உதவுமென கோபி அனான் உறுதி

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளை அவதானித்து வருவதாகவும், இலங்கையின் அபிவிருத்திக்கு ஐ.நா. உதவும் எனவும் அதன் செயலாளர் நாயகம் கோபி அனான் உறுதியளித்துள்ளார்.

அனானை அமைச்சர் மிலிந்த மொறகொட சந்தித்தபோதே, அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார். ஜூன் மாதம் ரோக்கியோவில் நடைபெறவுள்ள நிதி உதவி மாநாட்டுக்கு ஐ.நா. குழுவொன்றை அனுப்பிவைப்பதாகவும் கோபி அனான் இச் சந்திப்பில் உறுதியளித்தார்.

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-730)

# தோலகட்டியில் குண்டு வெடிப்பு நான்கு படையினர் காயம்!

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ உயர்பாது காப்பு வலயப்பகுதியில் அமைந்துள்ள தோலகட்டியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில், நான்கு இராணுவத்தினர் காயமடைந்ததாக இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்த 10 ஆம் திகதி, வெடி பொருள் ஒன்றைச் சோதனையிட்டுக் கொண்டிருந்தபோதே இந்த விபத்து ஏற்பட்டது. இதில் காயமுற்ற நான்கு இராணுவத்தினரும் பலாலி இரா ணுவ வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவரு கின்றது.

## உலக இந்து மாநாட்டுக்கான

# சிறப்பு மலரில் பிரசுரிப்பதற்கு கோயில்கள் வரலாறு கோரப்படுகிறது

உலக இந்து மாநாடு தொடர் பாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பிராந்திய மாநாட்டையொட்டி ஒரு சிறப்பு மலரினை வெளியீடு செய் வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்மலரில் இடம்பெறுவதற்காகக் கோயில்கள், இந்துசமய நிறுவனங் கள் என்பவற்றின் சுருக்க வரலா றும், படமும் வேண்டப்படுகின்றன.

எனவே, இம்மலரில் தங்கள் கோயில், நிறுவன வரலாறு இடம் பெற வேண்டுமென விரும்புபவர் கள், தங்கள் கோயில், நிறுவனத் தின் சுருக்க வரலாற்றினையும் படத்தினையும் நாளைய தினத்திற் குள் - இந்து மாநாட்டுச் செயலகம், குருகுலம், ஆனைப்பந்தி, யாழ்ப்பா ணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பேராசிரியர் சண்முக தாஸ் அறிவித்துள்ளார். (லி)

# மத்தியூஸ் வீதியில் பாலம் சேதம்!

(யாழ்ப்பாணம்)

குருநகர் மத்தியூஸ் வீதியில் உள்ள பாலம் ஒன்று, மணல் லொறி ஏறியதால் ஏற்பட்ட அழுத்தம் தாங் காத காரணத்தால் இடிந்து நொறுங் கியது.

இதனால் - மணல் ஏற்றப்பட்ட லொறி பாலத்தினுள் வீழ்ந்தது. அதனைத் தொடர்ந்து, சில மணி நேரம் அவ்வீதியூடான போக்குவ ரத்து தடைப்பட்டிருந்தது. பின்னர் மற்றுமொரு லொறியினைக்கொண்டு மணல் லொறி இழுத்து வெளியே எடுக்கப்பட்டது.

எனினும் - இதுவரை பாலம் மீளக்கட்டப்படாததால் அவ்வழியால் போக்குவரத்துச் செய்வோர் பெரும் சிரமங்களையும் ஆபத்தையும் எதிர் நோக்கவேண்டியுள்ளது.

# இன்றைய நாள் இனிய நாள்

## 14-04-2003 - திங்கட்கிழமை

மேடம் :- சுபகாரிய சித்தி, எடுத்த காரியம் கைகூடுதல், ரோக நீக்கம், நன்மதிப்பு, பணவரவு.

இடபம் :- சத்துரு ஜெயம், சமாதான வாழ்வு, மனமகிழ்ச்சி, நற் கீர்த்தி, தனதானிய நிறைவு.

மிதுனம் :- அதிகார சித்தி, தருமகாரிய சித்தி, சந்தோஷ மிகுதி, சௌக்கியம்.

கர்க்கடகம் :- பிரயாசை மிகுதி, தாரபுத்திரருக்கு ரோகம். புத்தித் திறமை, வித்தை விருத்தி.

சிங்கம் :- அதிகார சித்தி, சன்மானம், தொழில் விருத்தி, பிரயா சைக் குறைவு, காரிய சித்தி.

கன்னி :- களஸ்திர சுகம், வாக்கு வசீகரம், இல்லச்சிறப்பு, காரி யத் திறமை, நன்மதிப்பு.

**பிரபல சோதிடர்**
**எஸ்.குகநேசன்**

துலாம் :- அதிக பிரயாசம், பிரயாண மூலம் செலவுகள், நன்ம திப்பு, காரிய வெற்றி, உபகாரம் பெறுதல்.

விருச்சிகம் :- பொருள்வரவு, நன்மதிப்பு, சௌபாக்கியம், இல்லச்சிறப்பு, களஸ்திர மகிழ்ச்சி.

தனு :- புதிய ஸ்தானம், அதிகார சித்தி, சிநேகலாபம், சரீரப் பலக்குறைவு, குடும்ப மகிழ்ச்சி.

மகரம் :- பொருள்வரவு, சத்துரு நாசம், சிநேக லாபம், தொழில் விருத்தி, நற்கீர்த்தி.

கும்பம் :- பிரயாசை மிகுதி, பொருள்வரவு, சந்தோஷம், தரும காரிய சித்தி, காரிய சித்தி.

மீனம் :- சந்தோஷ மிகுதி, அதிகார விருத்தி, களஸ்திர சுகம், புத்திரரால் நன்மை.

ராஜா யாழ்ப்பாணம்.
ஸ்ரீகாந், பூமிகா, விவேக், ராதிகா நடித்த
ரோஜாக்கூட்டம்
10.30, 2.30, 6.30
இரவு 9.30 மட்டும் HOLLOW MAN
புதுவருட வெளியீடு
அரசு
(சி-732)

நிறைஞ்சனாஸ் சங்கானை
நிறைஞ்சனாஸ் ரசிகப் பெரு மக்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
விஜயகாந், சிம்ரன் நடித்த
ரமணா
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
(இன்று) 14-04-2003 மட்டும் விசேட காட்சி இரவு 9.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
URASSIC PARK 3
(சி-731)

சகல வாடிக்கையாளர்களுக்கும் எமது உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.
சிறந்த சிகையலங்காரத்திற்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.
CITY BOY SALON


இல. 256, கஸ்தூரியர் வீதி,
கன்னாதிட்டி சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P.No - 0776-005349
உரிமையாளர் சசி, ஊழியர்கள்.
(சி-835)

SERENDIB AIRLINE
அனைவருக்கும் எமது
"சுபானு"
புத்தாண்டு வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்.
Manoj-Serendib Express
13, Power House Road,
Jaffna.
TP- 021-2223916
0777-801038
0777-517019
(சி-842)


கலாசார மண்டபத்தின் படத்தை இங்கே காண்கிறீர்கள்.
'என் கடன் பணி செய்து கிடப்பதே'
அல்வாய்
வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான கலாசார மண்டப
திறப்பு விழா
இன்று புதுவருடப் பிறப்பன்று பி.ப. 2.30 மணிக்கு நடைபெறும் திறப்பு விழாவில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் ஜீ.ஜீ.கஜேந் திரகுமார் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். கரவெட்டி பிரதேச செயலர் க.கனகரத்தினம், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, மின்சார சபை பொறியியலாளர் எஸ்.வல்லிபுரம், வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வர்.
(சி-823)

இனிய ஆரோக்கியமான புத்தாண்டு வாழ்த்துக்கள்
சுஜெ சித்த மருத்துவ நிலையம்
SUJAY SIDDHA MEDICAL CENTRE
☆ மருத்துவ ஆலோசனைகள் ☆ சித்த மருத்துவ சிகிச்சைகள்
பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ள வேண்டிய முகவரி -
83, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
T.p.No. 0777-737357, 0776-027948
(சி-837)

நண்பர்கள் வாடிக்கையாளர்கள் யாவர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

சாருகா நகைமாடம்
தரமான தங்கத்திற்கு நாடவேண்டிய இடம்
172A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் முன்பாக)
T.P - 0777 - 296374
உரிமையாளர்கள்,
பா.கோபி
வா.குணா
(சி-838)


நமது ஈழநாடு பத்திரிகை நிறுவனமும் STP கணனி நிறுவனமும் இணைந்து நடாத்தும்
மாபெரும் இலவச கணனிக் கருத்தரங்கு
இடம்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி
காலம்: 16.04.03, புதன் கிழமை
நேரம்: காலை 10.00 மணி தொடக்கம் 01.00 மணி வரை
கணனி ஓர் அறிமுகம், மென்பொருட்கள், வன்பொருட்கள், அரசின் கணனிக் கல்வித் திட்டம், இணையம், நவீன வரவுகள்
பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நமது ஈழநாடு

# ஜனநாயக அரசியல் வழிமுறைக்குள் புலிகளைக் கொண்டுவருவது தவறா?

## பிரதமர் ரணில் கேள்வி



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள், ஜனநாயக வழிமுறைக்குத் திரும்புவதற்குரிய வழிகளைச் செய்து கொடுப்பதில் என்ன தவறு இருக்கிறது என்று கேள்வி எழுப்பியுள்ளார், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம், சமாதான முயற்சிகளின் பெயரால் புலிகளை வளர்த்துக் கொண்டிருப்பதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து கருத்து வெளியிட்டபோதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறியிருக்கின்றார்.

ஆயுதக் கிளர்ச்சிகளில் ஈடுபட்ட ஜே.வி.பிக்கு ஜனநாயக அரசியல் வழிமுறைகளுக்குத் திரும்புவதற்கு உரிய இடம் வழங்கப்பட்டது. இதனால்தான் அந்தக் கட்சி இன்று நாடாளுமன்றத்தில் கணிசமான ஆசனங்களைப் பெற்று - அரசியலில் மூன்றாவது சக்தியாக வளர்ந்திருக்கிறது.

இந்த வகையில், புலிகளையும் ஜனநாயக அரசியல் வழிமுறைக்குள் கொண்டுவருவதற்குரிய நடவடிக்கைகளையே நாம் எடுத்து வருகின்றோம்.

சமாதானப் பேச்சுக்களை எதிர்க்கின்ற - யுத்தத்தை ஆதரிக்கின்ற எந்தவொரு அரசியல்வாதியும் தனது பிள்ளைகளைப் போருக்காக அனுப்பவில்லை. அனுப்பத் தயாராகவும் இல்லை.

வறிய பெற்றோர்களின் பிள்ளைகளே போரில் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டார்கள். இந்தநிலை மாறவேண்டும். இன்னொரு போர் ஏற்பட்டு அப்பாவியான இளைஞர்கள் பலியாக்கப்படக்கூடாது.

இன்று புலிகளுடன் நடத்தப்படும் பேச்சுக்கள் மூலம்தான் பெருமளவு வெளிநாட்டு உதவிகள் கிடைக்கின்றன. இந்த வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு போரினால் சிதைந்துபோயுள்ள நாட்டின் வடக்கு - கிழக்குப் பகுதிகளை மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களையும் அபிவிருத்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

முன்னர் சிறுபான்மையினருக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று கூறிய ஜே.வி.பி., இன்று சமஷ்டித் தீர்வைக்கூட தமிழர்களுக்கு வழங்கக்கூடாது எனக் கூறுகின்றது.

இது, ஜே.வி.பி. முதலாளித்துவ சக்திகளுடன் இணைந்துவிட்டதென்பதையே காட்டுகிறது என்றும் பிரதமர் ரணில் மேலும் தெரிவித்தார்.

## 30 ஆம் திகதிக்குள் இலக்கத்தகடுகள் பெறவும்

(நவிண்டில்)

கரவெட்டி பிரதேசசபைக்கு உட்பட்ட அனைத்து துவிச்சக்கர வண்டி பாவனையாளர்களும், தமது துவிச்சக்கர வண்டிக்கான இலக்கத் தகடுகளை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாகப் பெற்றுக் கொள்ளும்படி பிரதேச சபையின் விசேட ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## இளம் சைவப் புலவர் தேர்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தால் வருடாந்தம் நடாத்தப்படும் இளஞ்சைவப் புலவர் தேர்வு, சைவப் புலவர் தேர்வு என்பன எதிர்வரும் 18 ஆம் 20 ஆம் திகதிகளில் யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயம், வவுனியா ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு யாழ்ப்பாணம் மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்களிலிருந்து பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். பரீட்சையில் சித்தியடைவோருக்கு 2004 ஏப்பிரல் மாதம் பட்டம் வழங்கப்படவுள்ளது.

# லண்டனில் தமிழரின் வன்முறையை கட்டுப்படுத்த தனிப் பொலிஸ் படை

(லண்டன்)

லண்டனில் தங்கியுள்ள ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் பரவிவரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த, பிரிட்டிஷ் பொலிஸார் - விசேட பொலிஸ் குழுவொன்றை அமைத்துள்ளனர்.

தங்கப்படை (**Gold Group**) என்ற பெயரில் அமைக்கப்பட்டிருக்கும் இந்தப் பொலிஸ் குழுவில், பிரிட்டனின் விசேட புலனாய்வுப் பிரிவான ஸ்கொட்லண்ட்யாட்டும், அதிரடிப்படையினரும் இணைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த மாதம் 20 ஆம் திகதி லண்டன், இல்போட் என்ற இடத்தில் தங்கவேல் திலீபன் என்ற இளைஞர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். இவர் சட்டத்துக்கு முரணான செயற்பாடுகளில் ஈடுபட்டுவருவதாகக் கருதப்படும் செம்படை (**Red Group**) என்ற குழுவின் உறுப்பினராக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

வன்முறைகளில் ஈடுபடும் குழுக்களுக்கிடையிலான பூசல்களே இந்தக் கொலைக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

லண்டனில் புகலிடம் தேடியுள்ள ஈழத்தமிழ்மக்கள் மத்தியில் சமீப காலமாக வன்முறைகள் அதிகரித்து வருவதால், இவற்றைத் தடுக்கவே லண்டன் பொலிஸார் தனிப்படை ஒன்றை அமைத்துள்ளனர்.

வீதிச் சண்டைகள், கார் எரிப்பு சம்பங்கள் மற்றும் கிரடிட் காட் மோசடிச் சம்பங்களுடன் தொடர்புடையவர்கள் குறித்து இந்தப் பொலிஸ் குழு விசேட கவனம் செலுத்தும் எனவும் தெரியவருகிறது.

# அதிக புகைவிடும் வாகனங்கள் வீதிப்போக்குவரத்துக்குத் தடை

## அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு

அதிகளவிலான புகையை வெளிவிட்டு - சுற்றுச் சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் வாகனங்களைத் தடைசெய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. தற்போது நாட்டில் 13 இலட்சத்து 50 ஆயிரம் வாகனங்கள் உள்ளன. இவற்றுள் பெருமளவு வாகனங்கள் வீதிப் போக்குவரத்துக்குத் தகுதியற்றவை என்றும், சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துபவை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய வாகனங்களையே வீதிப் போக்குவரத்தில் ஈடுபடாமல் தடைசெய்வதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அளவுக்கு அதிகமாக புகைகக்கும் வாகனங்களைக் கண்டுபிடித்து, அவற்றைத் தடைசெய்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளில் அரசு விரைவில் ஈடுபடவுள்ளது.

# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தில் 74 வயதான பௌத்த பிக்கு கைது!

பதியத்தலாவவில் 74 வயதான பௌத்த பிக்கு ஒருவர் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மகாவலி அபிவிருத்தித்திட்ட அதிகாரிகள் இருவர் - 12,13 வயதுடைய இரு சிறுமிகளை வேலைக்கு அமர்த்தி, அவர்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தி வந்துள்ளனர். இது தொடர்பாக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டபோதே 74 வயதான பௌத்த பிக்குவும் அதில் சம்பந்தப்பட்டிருப்பது தெரியவந்தது.

இதையடுத்து, மூவரையும் பொலிஸார் கைதுசெய்து பொலனறுவ நீதிமன்றத்தில் நிறுத்தினர். இவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

# கலையில் ஈடுபாடு இல்லாதவர் முழு மனிதனாக இருக்க முடியாது

## மானுடத்தின் கூடல் இறுதிநாள் நிகழ்வில் பாலகுமாரன்

கலையில் ஈடுபாடில்லாதவன் முழு மனிதனாக இருக்க முடியாது, மானுடநேயனாகத் திகழமுடியாது. ஒரு சமூகத்தினை அழிப்பதானால் அவர்களின் மொழி, கலை, பண்பாட்டுக் கூறுகளை எதிரி அழிப்பதை நாம் அறிவோம். இன்று பல ஊடகங்கள்கூட அதனைச் செய்து கொண்டிருக்கின்றன என விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் பாலகுமாரன் - திருமலை மானுடத்தின்கூடல் இறுதிநாள் நிகழ்வில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

தமிழ்மொழியும் ஆட்சிமொழியாக அரசியல் யாப்பில் 1985 ஆம் ஆண்டின், 13 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் மூலம் இருந்தும், வட - கிழக்கில் திருமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் எங்கினும் ஒரு பொலிஸ் நிலையத்தில்கூட தமிழில் தங்கள் முறைப்பாட்டினைப் பதிவு செய்துகொள்ள முடிவதில்லை. குற்றப்பத்திரிகை, குற்ற ஒப்புதல் வாக்குமூலம் யாவும் சிங்களத்திலேயே இருந்துகொண்டிருக்கிறது.

இங்கே நடந்துகொண்டிருக்கும் இவ்விழாவினை உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்கள், தொலைக்காட்சி நிறுவனத்தினர் உலகுக்கு அளித்துக் கொண்டிருக்கும் வேளையில், நாங்கள் அறிவித்திருந்தும் ரூபவாஹினியையோ, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினரையோ இங்கே காணமுடியவில்லை. ஏற்கனவே இலங்கை வானொலியில் தமிழ் ஒலிபரப்புக்கான நேரம் அரைமணி நேரத்தால் குறைக்கப்பட்டுள்ளது. எமக்கென ஒரு தனித் தமிழ் ஒலியலை வரிசை ரூபவாஹினியில் எமக்கில்லை. இவை எமக்கான ஒரு தேசத்தின் தேவையைச் சொல்லி நிற்கின்றன.

எமது உரிமைகள் திட்டமிட்டுப் பறிக்கப்பட்டு வந்துள்ளன. அல்லை - கந்தளாய் போன்ற அரச குடியேற்றத் திட்டங்கள் மூலம் திருகோணமலையும், மட்டக்களப்பும், பதவியா - மணலாறு திட்டத்தின் மூலம் திருகோணமலையும், யாழ்ப்பாணமும் பிரிக்கப்பட்டன. திருகோணமலைப் பட்டணத்திலேயேகூட முக்கிய சந்திகளில் எல்லாம் சிங்களக் குடியமர்த்தலினால் நகரம் கூறுபோடப்பட்டுக் கிடக்கிறது.

தீர்த்தக்கரைகள் சிங்களக் குடியேற்றத்தாலும், அரச படையினராலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. புதிய சந்தை மூடிக்கிடக்கிறது. 1827 இல் 81.8 வீதமாக இருந்த தமிழரின் சனத்தொகை, 1981 இல் 36.6 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 1.3 வீதமாக இருந்த அதாவது, 250 பேர் வாழ்நத சிங்களவர் இன்று 33.6 வீதமாக அதிகரித்துள்ளனர்.

இது திட்டமிடப்பட்டு அரசினால் செய்யப்பட்டுள்ளது. திருகோணமலையின் 204 வருட கச்சேரிமுறை, சிவில் ஆட்சியில் - ஒரு தமிழன் அரச அதிபராக இற்றைவரை கடமையாற்ற முடியவில்லை. பன்குளம் - மொறவேவவாக, குமரன்கடவை- கோமரக்கடவலவாக மாற்றப்பட்டுவிட்டது. நாட்டின் 2/3 பங்கு கடற்கரையைக் கொண்டிருக்கும்



வட- கிழக்கு மீனவர்களின் தொழில், கடல் பாதுகாப்பு வலயங்களால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அரச படைகளின் மொத்தத் தொகையில் 40 வீதத்தினர் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ளனர். 30 வீதமான நிலப்பரப்பை உயர் பாதுகாப்பு வலயமென்று படையினர் சுற்றிவளைத்துக் கொண்டுள்ளனர். மக்களின் பிரத்தியேகச் சொத்துரிமை பறிக்கப்பட்டுள்ளது. இயல்பு நிலைககு மீளமுடியாமல் தவிர்க்கப்பட்டுள்ளது. இன்றைய யுத்தமற்ற சூழ்நிலையிலும் அரச படையதிகாரிகள் தமிழா தம் உரிமைகளை - தாங்கள் தமிழர்களுக்கு வழங்கும் ஒரு சலுகையாகவே கருதுகிறார்கள். அவர்களின் யுத்தகால தோரணை, மனோநிலை இன்னும் மாற்றமடையவில்லை.

இவை சமாதானத்திற்குக் கட்டியங்கூறும் செயலாகத் தெரியவில்லை. இந்தச் சூழலில், போராட்டத்தின் மாறுபட்ட வடிவமாக, தமிழர் தம் மானுடநேயத்தின் உயர் நிலை வெளிப்பாடாக 'மானுடத்தின் தமிழ்க்கூடல்-II' திருகோணமலையில் இடம்பெறுகின்றது. 'உலகத்தின் கலைஞர்களே ஒன்றுகூடுங்கள்' எனத் தமிழ்த் தேசியத் தலைவர் அறைகூவல் விடுத்துள்ளார்.

கலைஞர்களையும், அறிஞர்களையும், போராளிகளையும் தமிழிசையின் முன்னோடியான இராவணன் ஆண்ட நிலத்தில் - கோயிலும், சுனையும், கடலுடன் சூழ்ந்த ஒருகாலத்தின் குடிதனைப் பெருக்கித் தமிழர் நெருக்கமாய் வாழ்ந்த திருகோணமலையில் கூட்டியிருக்கிறார்கள். இன்று பல கலை வடிவங்களின் சங்கமமாக இசையில் நனைந்து, நடனத்தில் திளைத்து, நாடகத்தில் மூழ்கி நிற்கிறோம் எனத் தெரிவித்தார்.

# சமாதான முயற்சிகள் குறித்து அனானுக்கு மிலிந்த விளக்கம்

ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அனானைச் சந்தித்து, அமைச்சர் மிலிந்த மொரகொட - இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து விளக்கமளித்துள்ளார்.

வொஷிங்டனில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது, ஜுன் மாதம் ரோக்கியோவில் இடம்பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகளை ரோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ளச் செய்வதற்கான முயற்சிகளில் தான் ஈடுபடப்போவதாக கோபி அனான் - அமைச்சர் மிலிந்த மொரகொடவிடம் உறுதியளித்தார்.

கடந்த மூன்று மாதங்களுக்கு இலங்கையில் உயர் அரசியல் பிரமுகர்கள் ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அனானுடன் சந்திப்பது இது மூன்றாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (01)

# சிறுவர் தொடர்பாடற் குழு மதிப்பிட அதிகாரிகள் வருகை

யாழ்.மாவட்டத்திலுள்ள, சிறுவர் தொடர்பாடற் குழுவின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்காகப் பிரித்தானிய பேரவையின் இலங்கைக்கான சிறப்பு அலுவலர் வீரக்கொடி தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளனர்.

இவர்கள் யாழ்.மாவட்டத்தில் சிறுவர் தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்தினைச் செயற்படுத்தி வரும் சிறுவர் பாதுகாப்பு அமைப்பினருடனும், யாழ்.இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி, ஊர்காவற்துறை சென். அன்ரனீஸ் கல்லூரி ஆகியவற்றின் சிறுவர் தொடர்பாடல் குழு அங்கத்தவர்களுடனும் கலந்துரையாடல்கள் மற்றும் மதிப்பீடுகள் ஆகியவற்றையும் மேற்கொள்ளவுள்ளனர்.

# பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களே உங்களுக்குச் சில ஆலோசனைகள்

*(நேற்றைய தொடர்ச்சி....)*

### கணினி மதிப்பீடு

பல்தேர்வு வினாக்களுக்கான விடைத்தாள் மதிப்பீடுகள் இன்று கணினி மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. கணினிகள் எவ்வாறு பல்தேர்வு வினாக்களின் விடைத்தாள் மதிப்பீடுகளுக்கு உபயோகிக்கப்படுகின்றன என்பது பற்றி இங்கு ஆராயப்படவில்லை. எனினும், கணினி மதிப்பீட்டு நடவடிக்கைகளை நேர்த்தியாக, செம்மையாக மேற்கொள்ள மாணவர்கள் எவ்வாறு செயற்பட்டுக்கொள்ளவேண்டும் என்பதே இக் கட்டுரையின் பிரதான பார்வையாக உள்ளது.

### சுட்டிலக்கத்தை குறிப்பிடும் முறைகளிலுள்ள தவறும் சரியான முறையும்

மாணவன் ஒருவனின் சுட்டிலக்கம் 0214176 எனின் அதனை எவ்வாறு OMR தாளில் குறிப்பிடுவது, சுட்டிலக்கங்களைக் குறிப்பிடுவதற்கு HB ரக பென்சிலை அல்லது நீல/கறுப்பு குமிழ்முனைப் பேனாவை உபயோகிக்க வேண்டுமென பரீட்சைத் திணைக்களம் அறிவித்தல் விடுத்திருக்கின்றது.




முறை I முறை II முறை III

சுட்டிலக்கங்களை முதலில் மேலுள்ள 07 அடைப்புப் பெட்டிகளுக்குள் தனித்தனியாக மிக அவதானமாக எழுதியதைத் தொடர்ந்து கீழுள்ள எண்பரம்பலை அடையாளமிடத் தொடங்கவேண்டும். இதற்குப் பரீட்சை

**பொன்னையா அரவிந்தன்**
(B.Sc Dip in Ed)
**ஹாட்லிக் கல்லூரி**

மண்டபத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் உதவிக்கொள்வார்கள்.

முறை I இலே மேலேயுள்ள கூட்டினுள் குறிக்கப்பட்டிருக்கும் சுட்டிலக்கத்தினை அதற்கு கீழுள்ள எண்பரம்பல்களை உரியமுறையில் நிழற்படுத்திக் காட்டப்படவில்லை. இதனால், கணினியினால் இச்சுட்டிலக்கத்தினைத் திருத்தமாக வாசிக்கும் சந்தர்ப்பம் இழக்கப்படுகிறது.

அதேபோன்றே, முறை II இலே எண்பரம்பலானது நிழற்படுத்தப்படுவதற்குப் பதிலாக (X) என்ற அடையாளமிடப்பட்டிருக்கின்றது. இந்த அடையாளத்தினை, கணினியினால் சரியானமுறையில் வாசிக்கப்பட முடியாதிருக்கும். எனவே, இச்சந்தர்ப்பத்திலும் கணினியினால் சுட்டிலக்கத்தினை திருத்தமாக வாசிக்கும் சந்தர்ப்பம் இழக்கப்படுகின்றது.

அடுத்த முறை III இலே எண்பரம்பலானது சரியாக நிழற்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, கணினியினால் 0214176 என்ற சுட்டிலக்கமானது திருத்தமாக வாசிக்கப்படுகிறது.

எண்பரம்பல்களை நிழற்படுத்துவதற்கு அடையாளமிடப் பயன்படுத்தும் பேனாக்களையோ அல்லது மைப் பேனாக்களையோ உபயோகிப்பதனைத் தவிர்த்தல் வேண்டும். அடையாளமிடலை பூரணமாக வட்டத்தினை நிரப்பும் வகையில் செய்தல் வேண்டும். வட்டத்திற்கு வெளியே எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டாம்.

### பாட எண்ணை குறிப்பிடும்போது ஏற்படும் தவறும் சரியான முறையும்

மாணவன் ஒருவன் எவ்வாறு தனது சுட்டிலக்கத்தினைச் சரியாகக் குறிப்பிட வேண்டுமென எவ்வளவு தூரம் எதிர்பார்க்கப்படுகின்றதோ, அதேபோன்றே பாட எண்ணையும் சரியாகக் குறிப்பிடுவது அவசியமாகும். உதாரணமாக- உயிரியல் பாடத்தைப் பரீட்சைக்காகத் தோற்றும் மாணவனின் உயிரியல் பாட எண் 09 ஆகும். அதனைப் பின்வரும் 04 மாணவர்கள் குறிப்பிட்ட விதங்கள் இங்கே காட்டப்படுகின்றன.




குமரன் விபுலன் கோகுலன் சதீஸ்

இங்கு குமரன் என்ற மாணவன், தனது பாட எண்ணினை அடையாளமிட்டிருக்கும் விதம், கணினியினால் அதனைத் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியாதிருக்கும். இது அவனின் பெறுபேற்றுக்களில் ஏமாற்றங்களைத் தோற்றுவிப்பதற்கு ஏதுவாக அமைய வாய்ப்புண்டு.

அதேபோன்று, கோகுலன் என்ற மாணவன் தனது பாட எண்ணினை மேலேயுள்ள கூட்டினுள் சரியாகக் குறிப்பிட்டிருப்பினும் எண் பரம்பல்களில் அதனை நிழற்படுத்திக் காட்டத்தவறியுள்ளார். இவ்வாறான தவறுகளை மாணவர்கள் தவிர்த்துக்கொள்வது அவசியம்.

அடுத்து, சதீஸ் என்ற மாணவன், தனது பாட எண்ணைச் சரியாக மேலேயுள்ள கூட்டினுள் குறிப்பிட்டிருப்பினும், எண்பரம்பல்களில் அதனைத் தவறாகக் குறித்துக்காட்டியுள்ளார். இவர் விட்ட தவறு - தான் தோற்றிய பாடத்தில் நிறைவான பெறுபேற்றினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிரான தொழிற்பாடாக அமைய வாய்ப்பாக உள்ளது. பரீட்சைப் பெறுபேறுகளை உரிய நேரத்தில் வெளியிடப்பட முடியாதநிலையையும் உருவாக்கும்.

இறுதியாக, விபுலன் என்ற மாணவன் - தனது பாட எண்ணினை எண் பரம்பல்களிலும் மேலேயுள்ள கூட்டினுள்ளும் சரியாக, உரிய முறையிலே குறிப்பிட்டு புத்திசாலித்தனமாக நடந்துள்ளார்.

எனவே, மாணவர்கள் இங்கு ஏற்படக்கூடிய தவறுகள் குறித்து மிகவும் அவதானமாக இருந்து மதிநுட்பமாக பரீட்சை மண்டபங்களில் நடந்து கொள்வது வரவேற்கத்தக்கதாகும்.

(நாளை தொடரும்...)

# சின்னஞ்சிறு செய்திகள்

## வங்கிகள் சிறப்புச் சலுகை

சித்திரைப் புத்தாண்டையொட்டி வங்கிகள்- வாடிக்கையாளர்களைக் கவரும் விதத்தில் இன்று வங்கிகளில் வைப்புச்செய்யும் வாடிக்கையாளர்களுக்குக் கவர்ச்சிகரமான பரிசுகளையும் அன்பளிப்புக்களையும் வழங்கவுள்ளனர்.

மக்கள் வங்கியில் புத்தாண்டு தினத்தன்று 15 ஆயிரம் ரூபா வைப்பிலிட்டால் குத்துவிளக்கு அன்பளிப்பாக வழங்கப்படுமெனவும், இலங்கை வங்கியில் 1500 ரூபா வைப்பிலிடுவோரின் பெயர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்குப் பணப்பரிசுகள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(34)

## ஆண்டு விழா

அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 63 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று பி.ப. 6 மணிக்கு நிலாவெளி விளையாட்டு மைதானத்தில் நிலையத் தலைவர் மா.வஞ்சிகுமார் தலைமையில் நடைபெறுவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக, தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## பரிசளிப்பு விழா

நல்லூர் சயன்ஸ் அக்கடமியில் கல்விகற்கும் மாணவர்களுக்கான முதலாந் தவணைக்கான பரிசளிப்பு விழாவும், கணிப்பீட்டு அறிக்கை வழங்கும் நிகழ்வும் - க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைப் பாராட்டுகின்ற நிகழ்வும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழர் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

புதுப் பொலிவுடன் உதிக்கும் "சுபானு" வருடத்தில் அனைவரினதும் வாழ்வில் சாந்தி சமாதானம் சுபீட்சம் தவழ்ந்திட வாழ்த்தினை தெரிவிக்கின்றார்கள். நீண்ட நாட்களின் பின்பு மீண்டும் வட பகுதியில்

Asia Bike இனை அறிமுகப்படுத்தும்

ஈஸ்வரன் ரேடர்ஸ்

ESWARRAN TRADERS
Lumala
BICYCLES SUPREME
BICYCLES - SPARES
INSIST ONLY ON ORIGINAL LUMALA BICYCLE & SPARES

பொதிகள் போக்குவரத்து சேவை

ஏ-9 வீதியின் ஊடாக தலைநகரில் இருந்து யாழ்.நகருக்கு முதன் முதலாக சமாதானத்திற்கான பொதிகள் போக்குவரத்துச் சேவையை ஆரம்பித்து சமாதான சகவாழ்வு ஓராண்டு நிறைவுற்று வழிவகுத்த பெருமைக்குரியவர்கள்

லுமாலா, ஹீரோ சைக்கிள்களையும் அதன் உதிரிப் பாகங்களையும் நியாயமான விலையில் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

ESWARRAN TRANSPORT SERVICES

யாழ்.நகரில்
இல.69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2813

தலைமைக் காரியாலயம்
இல.132, டாம் வீதி, கொழும்பு - 12
T.P. 074 714312
Hot Line:- 0777 674119

வவுனியாவில்
இல.148, கண்டி வீதி,
வவுனியா
T.P. 024 22497

(சி-810)

# நூல் அகம்




ஈழத்தமிழர் தம் தொன்மையான வரலாற்றை வரன் முறையாகவும், தெளிவான சான்றாதாரங்களுடனும், அண்மைக்கால ஆய்வுகளுடனும் தொடர்புபடுத்தியும் மேற்கொள்ளப் பெற்ற ஓர் அரிய நூலாக்கமாக "ஈழத் தமிழர் தொன்மை" விளங்குகின்றது. ஈழத்தமிழரின் பாரம்பரியங்களை, வரலாற்றுத்தளங்களை, தம் முன்னோர் பற்றிய அறிவை இன்றைய காலகட்டத்திலே திட்டவட்டமான தொல்பொருட்சான்றுகளை ஆதாரங்களாகக் காட்டி, இந்நூல் ஆக்கப் பெற்றுள்ளது. 1980 ஆம் ஆண்டிலீ பேராசிரியர் தமது கலாநிதிப்பட்ட ஆய்வைத் தொடர்ந்து கடந்த கால் நூற்றாண்டு காலமாக அவர் கருத்தரங்குகளில் வாசித்த கட்டுரைகளையும், வெளியிட்ட கட்டுரைகளையும் இற்றை வரை இவ்விடயம் பற்றித் திரட்டிய ஆதாரங்களையும் அடிப்படையாகக்கொண்டு இரத்தினச்சுருக்கமாக வெளிவருவதே இந்நூலாகும். இதன் சாரமாக ஈழத்தமிழரின் தொன்மை-சிங்களமக்களைப்போல் சமகாலத்தென்பதும், இதனை இற்றைக்குச் சுமார் மூவாயிரமாம் ஆண்டுகளென அறுதியிட்டுக் கூறலாம் எனவும் நூலாசிரியரின் ஆய்வு புலப்படுத்துகிறது.

பல்கலைக்கழகங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் ஈழத் தமிழர் பற்றிய தவறான புலக்காட்சிகள் வேண்டுமென்றும், திட்டமிடும், அகவய முனைப்புடனும் புனையப்பட்டுவரும் நிலையில் இந்நூலாக்கம், காலத்தின் தேவையாகவும், ஐதீகங்களின் நம்பிக்கைகளிலிருந்து புறவயமான வரலாற்றை (OBJECTIVE HISTORY) மீட்டெடுக்கும் முயற்சியாகவும் அமைந்துள்ளது. அதுவும் ஈழத்தமிழர் தமது தாயகக் கோட்பாட்டில் முனைப்புடன் செயற்பட்டுவரும் இக்காலகட்டத்தில், காலத்தின் தேவையைப் பூர்த்திசெய்யும் ஒன்றாகவும் இது அமைந்துள்ளது.

இந்நாட்டின் வரலாற்றாசிரியர்கள், ஈழத்துக்கு அண்மையிலுள்ள தமிழகத்தின் பங்கு பற்றி விரிவாக ஆராயாது விட்ட பெரும் இடைவெளியை இந்நூல் நிறைவேற்றி வைக்கின்றது. தாழிகள், பிராமிக் கல்வெட்டுகள், மட்பாண்டங்கள், ஆயுதங்கள், மணிவகைகள், பண்டைய நாணயங்கள், சொற்பிறப்பாக்கம் முதலிய ஒன்றிணைந்த சான்றாதாரங்களுடன், தமிழகத்தின் தொன்மை வரலாற்றையும், அதனுடன் தொடர்புடைய ஈழத்து வரலாற்றையும் தெளிவுறச் சித்திரிக்கும் முயற்சி இந்நூலிலே மேற்கொள்ளப்பெற்றுள்ளது. திராவிடப் பதங்களாகிய பருமக (பெருமகன்), ஆய (ஆய்), வேளு (வேள்), பரத, பத (பரதவர்) போன்றவை ஈழம் முழுவதும் காணப்படும் பழந்தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களில் வியாபித்துள்ளமை - தமிழகத்துக்கும் ஈழத்துக்குமுரிய தொன்மையான மொழி அடிப்படைகளின் ஒற்றுமையைப் புலப்படுத்துகின்றது. தமிழ்-சிங்கள மொழிகளில், மொழி அலகுகளுக்கிடையே காணப்படும் ஒற்றுமையானது சிங்களமொழியின் மூதாதை மொழி எனக் கூறப்படும் 'எலு' மொழியானது-பழந்தமிழ் மொழிகளில் ஒன்றென இந்நூலில் வலியுறுத்தப்படுதல் குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞான அடிப்படையில் இன்று மொழிகளை ஆராய்வோர், மொழியின் தனித்துவத்தைத் தீர்மானிக்கும் காரணி அதனது சொற்களஞ்சியம் அல்லவென்றும், அதனது வசனக் கட்டமைப்பே என்றும் விளக்குவர். அதாவது, சொற்களை ஒழுங்கமைக்கும் கட்டமைப்பு நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்பொழுது, சிங்களம்-திராவிட மொழிப்பாங்குடன் இணைந்துநிற்றல் பற்றிய ஆய்வுகளைச் சுட்டிக்காட்டும் ஆசிரியர், தமிழ்மொழிக்கும், சிங்களமொழிக்குமிடையே காணப்படும் நேர்நிலைத் தொடர்பு ஆதாரங்களைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றார்.

மரபணு ஆய்வு ஆதாரங்களின் அடிப்படைகளையும் இந்நூலசிரியர் தமது ஆய்வுகளிலே தொடர்புபடுத்தித் தென்னிந்தியாவுக்கும் ஈழத்துக்குமுள்ள வலிமையான உறவுகளைத் திட்டவட்டமாக்குகின்றார். சிங்களமக்கள்- வட இந்தியர்களிலும் பார்க்க, தென்னிந்திய மக்களுடனேதான் மரபணு அடிப்படையில் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருக்கும் சான்றாதாரங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

சிங்களமொழியின் தோற்றம் பற்றி விளக்கும்பொழுது, இந்நூலாசிரியர் 'எலு' மொழியைத் தமிழகத்தில் நிலவிய கொடுந்தமிழ் மொழியாகக் கொள்ளலாம் எனவும், இக் கொடுந்தமிழ்தான் பின்னர் சிங்களமொழியாக ஈழத்தில் வளர்ச்சிபெற்றதெனவும் சுட்டிக்காட்டியுள்ளமை வாசிப்போரது கவனத்தை ஈர்க்கின்றது. இந்நூல் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டால், புறவயமான கருத்துப் பரிமாற்றங்களை ஏற்படுத்துவதற்கு வழியமைக்கும் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. எனினும், இக்கருத்துக்களை ஆசிரியர் பலகாலமாகத் தென்னிலங்கையில் நடைபெற்ற கருத்தரங்குகள் பலவற்றிலும் வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஈழத்தமிழரின் ஆதிக் குடியேற்றத்தில் இரு அலைகளை நூலாசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். ஒன்று வரலாற்றுதயகாலக் குடியேற்றம் (கி.மு 1000-250 வரை) மற்றையது வரலாற்றுக் காலத்தில் கிறிஸ்துவுக்கு முன்னருள்ள காலப்பகுதியில் நிகழ்ந்த குடியேற்றம் (கி.மு 250 -1) வரலாற்றுதயகாலக் குடியேற்றம்பற்றி பாளி நூல்கள் தரும் சான்றுகள் கட்டுக்கதை என உறுதியுடன் நிராகரிக்கும் ஆசிரியர், அவை தென்னிந்தியாவிலிருந்து ஏற்பட்ட ஆதாரத்தை- தொல்லியல், மானிடவியல், மரபணுவியல், சமூகவியல், சாசனவியல் சான்றுகளால் நிறுவுகின்றார்.

வரலாற்று ஆய்வுகளில் இன்று அரசுக் கட்டமைப்பின் ஆக்கம் (STATE FORMATION) பற்றிய ஆய்வுகளும் சிறப்பிடம் பெற்று வருகின்றன. இதன் அடிப்படையிலும் தமிழக அரச உருவாக்கத்துக்கும், ஈழத்து அரச உருவாக்கத்திற்குமிடையே காணப்படும் தொடர்புகளும் நூலாசிரியரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இதனால், ஈழத்தில் அரச அதிகாரத்தைச் சிங்கள மக்களைப் போன்று தமிழ்மக்களும் பெற்று அனுபவித்துள்ளமையையும் இந்நூல் துலாம்பரப்படுத்தியுள்ளது. மிகவும் கூடுதலான சான்றாதாரங்களை (146 வரை)ப் பயன்படுத்தி எழுதப்பெற்றுள்ள இந்நூல்- பல்கலைக்கழகம் மற்றும் பள்ளிக்கூட உயர்வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், ஆழ்ந்த வாசிப்பில் ஈடுபடுவோருக்கும் பயனுறுதி மிக்க ஓர் ஆக்கமாகும்.

- பேராசிரியர் சபா. ஜெயராசா.

# அம்மா அழாதே!

குறுநாவல் — பகுதி 4

ரவி அருணாசலம்

கிளியன் களவெடுத்ததை விசாரிக்கிறதுக்கு பொலிஸ்காரர் வந்தவர். சுறுக்கென்று அப்பா சங்கக்கடைக்குப் போய் கடன் கொப்பியிலை ஒரேஞ்ச் பார்லி சோடா ஒரு போத்தலும், கால் றாத்தல் மலிபன் பிஸ்கற் சரையும் வாங்கிக்கொண்டு வந்தார். பேய், பாம்புபோலப் பொலிஸ்காரர்களுக்கு எனக்கு பீச்சல் பயம். ஜீப்பில் பொலிஸ்காரர்கள் வீட்டைவர நான் குசினியை விட்டு வெளியாலை வரேல்லை. பொலிஸ்காரர்களுக்கு இரண்டு கிளாசிலை ஒரேஞ்ச் பார்லியை ஊற்றிக் குடுத்த பிறகு மிச்சத்தை நான் குடிச்சன். 'எனக்கும், என்று



சண்டை பிடிக்க அக்கா அங்கில்லை. நிர்மதியக்கா வீட்டையாக்கும்.

அந்த நாட்களில் சில வெள்ளிக்கிழமைகளில் நாங்கள் அம்மாள் கோயிலக்குப் போறதை விட்டிட்டம். பெரியவிளான் காளி கோயிலிலை ஒரு மனிசி உரு ஆடி, அவா சொல்லியது எல்லாம் நடக்குது. வெள்ளி இரவுப் பூசை முடிய அவாவுக்கு மேலை காளி வாறா. நான் அம்மாவின் சீலையை விடாமல்தான் அதைப் பாப்பன். அப்பாவுக்கு அம்மாள் கோயிலை விட்டிட்டு அங்கை போறது விருப்பமில்லை. 'உது மனிசி கசிப்பு அடிச்சுப்போட்டு ஆக்களைப் பேய்க்காட்டுது' என்றும் சொன்னார். இந்த விசயத்தில் அம்மா - அப்பாவின் சொல்லைக் கேட்கவில்லை. ஒருவிதத்தில் அம்மாவே காளி! ஆர் சொல்லைக் கேப்பா? மற்றும் அம்மாவுக்குத் தீராத நோய்களும், தீராத பிரச்சினைகளும் இருந்தன. காளியிட்டைப் போனா. போறவழியிலை குரும்பகலட்டியிலை சகுந்தலாக்காவின் வீடு இருந்தது. பின்னேரம் நாங்கள் போகிறநேரம் சகுந்தலாக்கா கிளிச்சொண்டன் மாங்காய்க்குக் கல்லெறிவா. எங்களைக் கண்டிட்டு சிரிச்சுக்கொண்டு வருவா. சகுந்தலாக்கா நல்ல வடிவு. அது என்ன அழகு! அவா சிரிச்சாவேயெண்டால் பிறகு வேறை பக்கம் பார்க்க மனம் வராது. அவாவின்ரை வடிவைப் பாக்கிறத்துக்காக அம்மாளை விட்டிட்டுக் காளியிட்டைப் போறது ஒண்டும் பெரிய பிழையில்லை.

போய்விட்டு வருகிறபோதுதான் இருண்டு, மேற்குப் பக்கம் வளர்பிறை விழுகிற நேரத்திலை, அப்பா யாழ்ப்பாணத்துக்கு நாகராசப் பத்தரிட்டை போயிட்டு வந்து கொண்டிருந்தார். எங்களுக்கு முன் நிழல் றோட்டிலை விழுந்து கொண்டிருக்க, நாங்கள் கிழக்குப் பக்கம் நடந்து கொண்டிருந்தம். அப்பா எங்களைக் கண்டிட்டு சைக்கிளை நிப்பாட்டி உருட்டினார். குரும்பகலட்டி, வேதக்காறச் சுடலைக்குக் கிட்டத்தான் அது. அந்த இருட்டுக்கை, சாடையான நிலவு வெளிச்சத்திலைதான் அம்மா கேட்டா 'வாங்கிக்கொண்டு வந்தீங்களா?' அப்பா வலுபுளுகத்திலை எடுத்துக்காட்டினார். அம்மா அதை வாங்கி என்ரை வலதுகை மோதிரவிரலிலை போட்டுவிட்டா. அந்தச் சின்ன நிலா வெளிச்சத்திலும் அது மின்னியது. நானும் மின்னினன். விடிய எழுந்ததும் மோதிரத்தை உடனை பார்த்தன். என்னோட்ட பொடியங்கள் எவரிட்டையும் மோதிரம் இருந்ததில்லை. மோதிரவிரல் என்று சொல்ல அவர்களுக்குத் தகுதியும் வரேல்லை. எனக்குத் தகுதி வந்தது. நான் மகாராசன் ஆனேன். 'ராசா வளர்த்த கிடாயை வித்துத்தானே மோதிரம் வாங்கினது' எண்டா. அம்மா பொய் சொல்லுறா. நொங்கு சீவி, சிக்காய்சீவி வளர்த்த ஆடு ஈன்ற கிடாய் கொம்பனாய் இருக்காது. கொழுத்துக் கிடக்காது வேறு எப்படி இருக்கும்? விக்க பெரும் காசு சேரும்.

காசு அம்மாவுக்கல்ல. அக்காவுக்கு, எனக்கு, அப்பாவுக்கு, வீட்டுக்கு, வளவுக்கு, நாய், ஆடு, பூனை, கோழிக்கு. அம்மாவிற்கு உழைக்கவும் தெரியும், சேமிக்கவும் தெரியும், செலவழிக்கவும் தெரியும். தீபாவளிக்கு, வருசப்பிறப்புக்கு ஊரில் நல்ல உடுப்புப் போட்டவர்கள் நாங்கள். எல்லா வேள்விக்கும், எல்லாச் சனிக்கிழமைகளிலும் கிடாய் இறைச்சி சாப்பிட்டவர்கள் நாங்கள். இராசலிங்கத்திடம் கணக்கு வைத்து விலை கூடிய விளைமீன் உண்டவர்கள் நாங்கள். 'பரமேஸ்வரியிட்டை போனால் ஒரு வாய் ருசிக்கத் தீன் தின்னலாம்' என்று நம்பி அம்மாவிடம் வந்தார்கள். சின்னகப் பேத்தி வந்தா, சீனியாச்சி வந்தா, செல்ல மைச்சாள் வந்தா, குஞ்சாச்சி, சின்னக்கா, பூவக்கா எல்லோரும் வந்தினம். சும்மா வந்தவர்களையும் ஒருவாய் சாப்பிடாமல் அம்மா விட்டதில்லை. சமைத்த திறம் கறிகளும் சருவச்சட்டியில் நிர்மதியக்கா வீட்டை போகும், சின்னம்மான் வீட்டை போகும், பெரிய மாமி வீட்டை போகும், கிராயிட்டி அத்தை வீட்டை போகும், மடத்தடி மாமா வீடு போகும், நாகம்மா வந்து சாப்பிடுவா, கந்தியாத்தை வந்து சாப்பிடுவா, இலச்சுமியிட்டை 'செல்லத்துரைக்குக் 'குடு' என்று குடுத்துவிடுவா. ஞாயிறு காலைக்கு வடலியடைப்பு கார்த்திகேசு ஐயா கொண்டு வந்து கொடுத்த, காலால் அரைத்த திறம் நல்லெண்ணெய்யைப் பொங்க, பொங்கவிட்டுக் குண்டுத் தோசை சுடுபடும். அரைச்சு, தாளித்த சம்பல் செய்படும். அவையும் பெட்டி பெட்டியாய் போகும். இப்படிப் போகவும், கொடுக்கவும், வரவேற்கவும், வாய் நிறைய உபசரிக்கவும் அம்மா ஓயாது உழைத்தா. ஆடுகள், கோழிகள் வளர்த்ததும், எலுமிச்சை வளர்த்து காய்கள் விற்ற காசும், பின் வளவில் நிறைய முருங்கைகள் நட்டு தண்ணி அள்ளி ஊத்தி வளர்த்து, திரணைதிரணையாய் முருங்கைக்காய்கள் விளைய, விற்றுத் திரட்டிய காசும் அம்மாவின் உபசாரத்துக்கு உதவின. எங்களுக்கு அதை, இதையென்று வாங்கிப்போட வைத்தன. புதுசா 'ரெர்லின்' சேர்ட் என்றால் அதுவும், பிறகு நைலோன் சேர்ட்டும், அப்பலோ சேர்ட்டும், சின்ரெக்ஸ் காச்சட்டையும், டெற்றோன் கொட்டன் சேர்ட்டும், பொலியஸ்ரர் சேர்ட்டும் அந்தந்தக் காலத்திற்கு எதெது திறமோ அதை வாங்க அம்மாவால் முடிந்தது.

மகாராணியா அம்மா வாழ்ந்தா. அம்மாவுக்கு இராஜங்கம் இருந்தது. வீட்டையும், வளவையும் அம்மா ஆண்டா. அப்பாவும், அக்காவும், நானும், நாயும், பூனையும், ஆடுகளும், கோழிகளும் அம்மாவின் ஆளுகைக்குள் இருந்தன. அனைத்திலும் அம்மாவுக்கு ஆழ்ந்த அன்பு இருந்தது. அளவிட முடியா இரக்கம் இருந்தது.

அம்மாவால் முடியாத காரியங்களும் இருந்தன. இரக்கப்படாமல் இருக்க முடியவில்லை. பிச்சைக்காரன் வீட்டுப் படலை தட்டினபோது, அம்மா அரிசி போட்டதில்லை. சில்லறை குடுத்ததில்லை. 'இப்பிடி உடம்பை வைச்சுக்கொண்டு பிச்சை எடுக்க வெக்கமா இல்லையா?' என்று ஏசினா. 'கொஞ்ச விறகு இருக்கு கொத்திவிடு, சாப்பாடும் காசும் தாறன்' என்றா.

ஆனால், அப்பாவுக்கு எப்படி சாப்பாடு கொடுத்தாவோ, எனக்கு எப்படிச் சாப்பாடு தந்தாவோ, மாமாவுக்கு எப்படிச் சாப்பாடு கொடுத்தாவோ அப்படிப் பிச்சைக்காரனுக்கும் குடுத்தா. ஒரு வித்தியாசம்.

நாங்கள் வீட்டுக் கோப்பையில் சாப்பிட்டோம். அவனுக்கு வாழையிலை விரித்துக் கொடுத்தா. அவன் சாப்பிட்டு கை கழுவி, தண்ணி குடிச்சு, அந்த நரைத்த தாடியினிடை, செம்பாட்டுப் புழுதிபடர்ந்த தலை மயிரி னிடை, பூளைசாறிய கண்களினிடை ஒளிதெறிக்க அம்மா வைப் பார்ப்பான். அவன் கை கும்பிடாது, மனசு கும்பிடும்.

(தொடரும்)

# இலக்கியச் சோலை

## மனிதனின் கவிதை



வானப் பரப்பில்
சிறகு விரிக்கத் தயாராகுகையில்
வலை வீசிப் பிடிக்கப்பட்டேன்.

மொழிகளையும்
மதங்களையும் கடந்து
மனிதம் நம்மைப் பிணைப்பதை
மறந்துவிட்டார்கள் போலும்.

அச்சுறுத்தியும்...
அடித்தும்
என்னிடம் கேட்ட ஒரே கேள்வி –
நீ பயங்கரவாதியா?

சிறைக் கம்பிகளின் பின்னால்
கண்கள் கட்டப்பட்டு...
கைகள் பிணைக்கப்பட்டு...
ஆடைகள் களையப் பெற்றவனாக
முகம் தரையில் அழுத்தக் கிடக்கிறேன்.
வாய்வழி கசிந்தோடும் செங்குருதி
செம்பாம்பாய் ஊர்ந்து
மூலையில் உறைந்துள்ளது.

உயிர் மூலம் சிதறி விடுமாப் போல
வலி பிறக்கின்றது.
நினைவு சுழன்று தடுமாறி...
எனக்கென்னவோ...

இறந்தோ...
நினைவிழந்தோ போவதற்குள்
அந்தப் படையினன் வருவானா,
நீ யாரென மீண்டும் கேட்பானா?

அவனிடம் சொல்லிட வேண்டும் –
நானொரு மனிதனென்பதை.

- யோ. கர்ணன்.

# வந்த வெள்ளம்



“உதென்ன? சட்டிபானை, மூடைமுடிச்சுக்களோடு உந்த மடத்தில் ஒரு முழுக்குடும்பமே குந்தியிருக்கிறது?” “அது ஒரு பரிதாபக்கதை. இடையில் வந்த பணத்தால் இருந்த நிலையுங்கெட்டு ஓர் அயலூர்க் குடும்பம் நடுத்தெருவுக்கு வந்திருக்கிறது. சுந்தரம் என்றொரு குடும்பஸ்தன். ஒரு கொம்பனி ஊழியன். ‘சியவச’ சீட்டிழுப்பில் 5 லட்சம் பரிசாக விழுந்தது. புதிதாகப் பலர் நண்பர்களாகவும், உறவினரென்றும் வந்து சுந்தரம் குடும்பத்தோடு ஒட்டி உறவாடி, உறுஞ்சி உறவாடினர். நித்தக்குடிகாரனான நண்பர் சிலரின் சிட்சையில் சுந்தரம் குடிப்பழக்கத்துக்கு அடிமையானான். குடிப்பதற்கு நேரம் போதாமையால் தான், பார்த்த கொம்பனி வேலையையும் கைபறிய விட்டான். பணம் - பலருக்கும் தானமாகவும், குடிவகையாகவும் கரைவதைத் தடுப்பதற்காகத் தம் வீட்டைப் பெருப்பித்துச் சுற்றுமதில் கட்டிப் பகட்டாகப் பூச்சடித்து, அழகுபடுத்துவதிலும், சனி, புதன்களில் இறைச்சி, முட்டை உணவுடன் அனைவரும் முழுக்காடுவதிலும், அடிக்கடி உச்சவிலைப் புதுமோடி ஆடைகள் வாங்குவிப்பதிலும், தனிவாடகை வானில் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதிலும் பணத்தை அள்ளியிறைத்ததன் மூலம்

## பஞ்சாட்சரம் கதைகள் 6

சுந்தரத்தின் மனைவி தன் குடும்பத்தை இடாம்பீகப் பழக்கங்களுக்கு மீளா அடிமைகளாக்கியும் வைத்துவிட்டாள். குடும்பச்செலவு முன்னரைவிடப் பத்துமடங்காகிவிட்டது. வராவரத்தாக வந்த 5 லட்சம் இந்த வழிகளில் 3 வருடங்களுள் முற்றாகக் கரைந்தொழிந்து, கடன்படும் படலம் ஆரம்பமாயிற்று. பெருந்தொகைகளாகக் கடன்கள் பட்ட சுந்தரம் குடும்பத்தால், தங்கள் ஆடம்பரவாழ்வு நிலையிலிருந்து சிக்கனத்துக்கு இறங்கமுடியவில்லை. பட்ட, படுகின்ற கடன்களுக்கும், பெருகிவரும் வட்டிக்கும், பெருக்கிக்கொண்டுள்ள அன்றாடத் தேவைக்குமாக முதலில் வீட்டுப் பண்டம், பாத்திரம், நகைநட்டுகளை விற்றும் சமாளிக்க முடியாமற் போகவே, கடைசியில் வீட்டையும் விற்றுக் கடன்களை அரைகுறையாகவே தீர்த்துவிட்டு இங்கு குடும்பமாக வந்து குந்தியுள்ளனர். அதிர்ஷ்டலாபச்சீட்டு விழுந்த குடும்பங்கள் அகலக்கால் வைத்து வாழ்ந்து அழிந்து போகும் வழமைக்கு இந்தக் குடும்பம் தப்பவில்லை.

# A-9 னை நீளும் நினைவுகள்

பகுதி இருபத்தேழு



கண்டி வீதிக் கவினைத் தரிசித்தோம்!
கலக்கி நின்றிட்ட வீதியில்... பல்லாண்டாய்த்
துன்பம் முகிழ்ந்து வளர்ந்ததோர் புள்ளியில்!
துயர் அமர்ந்தது! யாழ்.குடா நாடதன்
தொண்டைப் பகுதியில் திருத்தியோர் முள்ளென
துளிர்த்த தடைமுகாம்... வேர் விழுதால்... உயிர்
கொன்றெழுந்தது! ஆனை இறவினில்
கூற்றும், உப்பும் குவிந்து கிடந்தன.

உப்பளம் பெரும் உப்பளமாகவே
உயர்ந்திருந்ததும், அமுத சுரபியாய்
உப்பை அள்ளி அள்ளிக் கொடுத்ததும்,
உழைப்பவர்படைக்கு ஊதியந் தந்ததும்,
இப்புறத்தில் மலையில்லை என்றழும்
நிலைவிழ... உப்பு வரைகள் வரைந்ததும்,
உப்புப் பாத்திகள் இருமருங் கோங்க- ‘A - 9’
உயிர்த்ததும், கண்முன் வருகுதே!

அன்னியப் படை அமரும் வரையிலே
அழகெழுந்ததாம்! இந்தியர் போனதும்
எண்ணி எண்ணி இயங்கத் தொடங்கிற்று!
இரண்டாங் கட்டத்து ஈழப்போர் சுட்டதும்
கண்ணை மூடிற்று! பரந்தன் இரசாயனக்
களத்தினுள்ளிடம் வெற்றிடம் ஆனது.
‘தொண்ணூற்றொன்றின்’ நடுவில்... பெருஞ்சமர்
தொடங்கும் மூலமாய் இவ்விடம் மாறிற்று.

-ஜெயங்கொண்டான்

# கிழக்கும் மேற்கும்

## சிறுத்தொண்டர் நாயனார் - அமிஸ் எட் அமிலஸ்



முருகு

“ஆறு மாதத்துக்கு ஒருமுறையேதான்
பசுவைக் கொன்று உண்போம் - அத்துடன்
அவ்விதம் உணவுண்ணும் நாளும் இன்றுதான்!
ஆதலின் உம்மால் அவ்விதம் நமக்குணவு
படைத்திடல் இயலாது” என்றார் அடியவர்!
பதில்கேட்ட தொண்டர் “எம்மிடம் பசுக்கள்
பலவுண்டு அவைகளில் தாங்கள் விரும்பும்
பசுவைக் காட்டினால் தங்கள் விருப்பம் போல்
படைத்திடல் எமக்கு இலகுவாகும்” என்று
பணிவுடன் அடியவர் முன் வேண்டி நின்றார்!
அதுகேட்ட அடியவர் “நாம் உண்பதுவோ
நரபசு - அதுவும் ஐந்து வயதுடையதாய்ப்
பழுதில்லா அங்கமுடன் குடிக்கொரு பிள்ளையாய்
உள்ள ஆண் பிள்ளையைத் தாயார் பிடித்திடத்
தந்தை அரிந் தெடுத்துச் சமைத்த கறியுடன்தான்
நாமுண்போம்” என்று அடியவர் கூறவே
தம்மில்லம் அடைந்தவர் துணைவியை அழைத்துச்
சிவனடியவரின் “உண்ணும் முறையினை”
விளக்கி முடித்ததும் நங்கையைப் பார்த்து
“இன்னமும் தாமதம் இன்றியே நம்மகன்
சீராள தேவனை அழைப்பதே தகும்” என்று
சிறுத்தொண்டர் கூறிட நங்கையார் இசைந்து
“பள்ளிக் கூடத்திற்கு விரைந்து சென்று எம்
பாலனை அழைத்துடன் வாருங்கள்” என்றார்!
மகிழ்வுடன் சென்றவர் மகனுடன் வந்தார்!
எதிர் கொண்ட தாயார் மகனை அழைத்து
நீராடச் செய்து தந்தைக்குக் கொடுத்திடத்
தாயின் துணையுடன் அடியவர் விருப்பம் போல்
செல்வனை அரிந்து கழிப்பன கழித்துச்
சேர்ப்பன சேர்த்துப் பாகம் பண்ணிய
இறைச்சிக் கறியுடன் வேறும் கறிகளும்
சோறும் சமைத்துக் கணவனிடத் ததனை
அறியத் தந்தார் - திருவெண்காட்டு நங்கை!
சிறுத்தொண்டர் மிகுந்த மகிழ்வுடன் தமது
சிவனடி யவரின் இருப்பிடம் அடைந்து
உணவுண்ண வரும்படி அன்புடன் அழைத்தார்!
தொண்டரின் வீட்டுக்கு அடியவர் வந்ததும்
தந்தையும் தாயும் மலரிட்டு அவர்பதம்
வணங்கி அவரிடம் “உணவு படைக்கும்
விதிமுறை எது?” எனக் கேட்டிட அடியவர்
“அன்னத்துடன் சமைத்த கறிவகை அனைத்தையும்
எம்முன் ஒருங்கே படைப்பீர்” என்றனர்!
தந்தையும் தாயும் அவ்விதம் படைத்தனர்!
“அனைத்து உறுப்பும் பாகம் செய்தீரோ?” என
அடியவர் கேட்டிட “தலையிறைச்சியை மட்டும்
கழித்து விட்டோம்” எனப் பணிவுடன் கூறினர்!
அடியவர் அதற்கு “அதனையும் உண்போம்” எனக்
கூறிடக் கேட்டதும் இருவரும் திகைத்தனர்!
அருகினில் நின்ற தாதியா ராகிய
சந்தன நங்கையார் “அத்தலை இறைச்சியை
அடியவர் உணவினை உண்ணும் வேளையில்
நினைக்க வருமென்று முன்னரேயே நான்
பாகம் பண்ணினேன்” எனச் சொல்லிய வண்ணம்
எடுத்துக் கொடுத்திட அதனையும் படைத்தனர்!
“சிவனடி யார்களில் சிலரையாகிலும் இங்கே
அழைத்துடன் வருவீர்” என்றவர் பணிந்திட
“உணவை உண்டிட இதுவுமோர் தடையோ?”
என்றெண்ணிக் கொண்டு விரைந்த தொண்டர்
எவரையும் காணாது நொந்தில்லம் திரும்பி
“சிவனடி யார்கள் ஒருவரை யாகிலும்
எங்கெங்கும் காணேன்” எனத்தொண்டர் கூறிட
“உம்மைப் போலிங்கு திருநீறு இடுபவர்
வேறும் உள்ளனரோ? ஆதலின் நீரே
எமக்கு அருகினில் இருந்துணவு உண்பீர்” எனச்
சொல்லிய தோடவர் நங்கையைப் பார்த்து
“எமக்குப் படைத்ததில் எடுத்து இவருக்கும்
தனியொரு கலத்தில் படைப்பீர்” என்று
பணித்திட நங்கையார் படைத்து முடித்தார்!
சிறுத்தொண்டர் மீண்டும் அடியவ ரிடத்து
உண்ணும்படி வேண்டித் தாமுண்ணத் தொடங்கினார்!

(தொடரும்)

# பாலையும் சோலையும்

அடுத்தடுத்து வந்த இரண்டு கந்தசாமிகளில் ஏழைக் கந்தசாமிக்குப் பரீட்சையில் சித்தியடையாத கந்தசாமியின் புள்ளிகளையும், சித்தியடையாத கந்தசாமிக்கு ஏழைக் கந்தசாமியின் புள்ளிகளையும் இட்டுவிடுகின்றார். பரீட்சை முடிவு வெளியானபோது ஏழைக் கந்தசாமி ‘பெயில்’ என்றிருந்தது. தாயின் முகத்தில் விழிக்கவோ, தோல்வியைத் தாங்கவோ முடியாத கந்தசாமி, தற்கொலை புரிகிறான். இந்தக் கதையும் ‘பரீட்சைப் பிசாசு’ என்ற தலைப்பில் என்னால் நாடகமாக எழுதப்பட்டு ஈழகேசரியில் வெளியாயிற்று. 1952 இலேயே யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழையே முற்றுமுழுதாக அந்த நாடகத்தில் கையாண்டிருந்தேன் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசிரியர் கலாசாலைக் காலத்தில் ஈழகேசரியில் வெளியான ‘தீர்ப்பு’ (சங்கிலியன் நாடகம்) கதைக்கு ஆசிரியர் இராச அரியரத்தினம் சிறியதொரு பாராட்டுக் ‘குறிப்பு வெளியிட்டிருந்தார். ‘குட்டை நாய்’ என்ற சிறுகதையோடும் பாராட்டுக் குறிப்பொன்றை வெளியிட்டார். ஈழகேசரியில், கரவைக் கவி கந்தப்பனார் என்ற புனைபெயரில், ‘ஈழத்துப் பேனா மன்னர்கள்’ என்ற தொடர் கட்டுரையிலே (இரசிகமணி.கனகசெந்திநாதன் என்னைப்பற்றி எழுதிய கட்டுரையிலே) ‘குட்டை நாய்’ சிறுகதையே எனது கதைகளில் உச்சம் என்ற சாரப்பட எழுதியுள்ளதையும் இவ்விடத்தில் நினைவு கூர்கின்றேன்.

எனது எழுத்தாக்கத் தொடக்கத்தில் என்னை ஊக்குவித்த நண்பர்களில் ஒருவர் அமரரான மதுரகவி நாகராசன். அவருக்கு ஆரம்பத்திலிருந்தே கவிதை எழுதுவதில் ஈடுபாடும், திறனும் இருந்தன. ஆனால் எனக்கு அந்த ஆர்வம் அன்றில்லை.

“சொக்கன், எனக்குக் கவிதை செய்வதில் ஆர்வமுள்ள அளவிற்கு, வர்ணனைக்கான கற்பனை குறைவு. உமக்குக் கவிதையிலே ஆர்வமில்லாவிட்டாலும், உமது கதைகளிலே கவித்துவ வருணனைகளைக் கையாள்கின்றீர். எனக்கு அவ்வாறான சில வருணனைகளை எழுதித் தாரும். நான் கவிதையாக்குகிறேன்” என்று ஒரு தடவை கேட்டுக்கொண்டார். அவர் கோரிக்கையை எனக்குத் தெரிந்த அளவு எழுதி நிறைவேற்றினேன். அவர் அவற்றைக் கவிதையாக்கினார். முதிரா இளைஞரான எங்களின் ஆரம்ப முயற்சிகளை இன்று சுயவிமர்சனம் செய்தால் அவை சுய கண்டனமாகவே அமையும் என்பதற்கு ஐயமில்லை.

எனக்கும் எதுகைமோனை அமைந்த பாடல்களை இயற்றமுடியும் என்ற தன்னம்பிக்கை, ஆசிரிய கலாசாலையில் இடம்பெற்ற கல்விக் கண்காட்சி ஒன்றின்போதுதான் ஏற்பட்டது.

‘கல்வி’ என்ற தலைப்பில் விவேகானந்த சுவாமிகளின் கல்விசார் சிந்தனைகள் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டு, அவிநாசிலிங்கம் செட்டியாரால் ‘சக்தி’ பிரசுரமாக வெளியாகியிருந்தது. அவற்றிலிருந்து சில மேற்கோள்களைத் தெரிந்து நான் எழுதிக் கொடுக்க நல்ல உறுப்பெழுத்து எழுதும் திறமை படைத்த நண்பர் மு.இராசரத்தினம் அவற்றை மண்டபங்களின் மேற்புற அறைகளிலே எழுதுவதாய் ஏற்பாடாயிற்று.

மேற்கோள் வாசகங்கள் எதுகை, மோனை அமைய ஆக்கினால் என்னவென்று எண்ணினேன். “கல்வி என்பது மாந்தரின் உள்ளத்தில் ஏற்கனவே திகழ்கின்ற கருத்தினை வெளிக்கொணர்ந்து விகசிக்கச் செய்வதாகும்” என்று பொருள்பட்ட மேற்கோள் வாசகமே என் கவிதையாக்கத்தின் தொடக்கமாகும். அது பின் வருமாறு.

‘உள்ளத் துறையும் ஞானத்தை
மறைக்கும் வலிய திரையதனை
மெள்ளக் களையும் வேலையே
மேலாம் கல்வி கற்றலாம்.’

ஆசிரியர் கலாசாலை மாணவ காலத்திலேயே, ஆசிரிய சமுதாயத்தின் பணியினை அது பணம் ஈட்டும் குறிக்கோளாய் இருத்தல்



கூடாது. மாணவரின் அறிவை விருத்திசெய்து, சமுதாயத்திற்கு அவர்களைப் பயனுள்ளவராய் ஆக்குதலே என்பதை வலியுறுத்தி ஒரு விருத்தப்பா - ஒரேயொரு விருத்தப்பா- எழுதி

## கலாநிதி.சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்

ஈழகேசரிக்கு அனுப்பினேன். என் படைப்புக்களில் எவற்றையுமே தள்ளாது ஏற்றுப் பிரசுரித்துவந்த ஈழகேசரி என்பதை ‘ஆசிரிய சமுதாயமே விழித்தெழு’ என்ற தலைப்பில் பெட்டியிட்டு அப்பாடலை வெளியிட்டது.

தமது கலாநிதித் தேர்வுக்கு ஆய்வு மேற்கொண்ட என் இளைய நண்பர் பண்டிதர் செ. திருநாவுக்கரசு- தமது ஆய்வுக்கு மேற்கோள் தேடிய பொழுது இப்பாடல் அவர் கண்ணில் பட்டது. “சேர்” அது நல்ல கவிதை. இன்றைக்கும் பொருந்தும் என்று, என்றோ நான் எழுதி நான் மறந்துவிட்ட கவிதையை நினைவூட்டிப் பாராட்டினார்.

எழுத்துலகின் எல்லாத்துறைகளிலும் கை வைத்தது என் பலமும், பலவீனமும் என்று நண்பர் செங்கை ஆழியான் ஒருமுறை கூறினார். அது ஓரளவு உண்மைதான். ஆனால் இது காலங்கடந்த கழிவிரக்கம்!

(தொடரும்)

# சுபானு புதுவருட சிறப்பிதழ்

## நம்பிக்கையோடு மலரும் புத்தாண்டு

*சித்திரையாள் வந்தாள். இத்தரையில் சிதிலங்கள் நீக்கிச் சிறப்புக்கள் ஆக்கி உத்தமமாய் நல் வாழ்வைப் பொங்கலிட்டுப் படைப்பாள்.*

மீண்டும் ஒரு இனிய புத்தாண்டு மலர்ந்திருக்கின்றது. மனத்தில் நம்பிக்கையை நிரப்பிக்கொண்டு வரவேற்றுக் கொண்டிருக்கிறோம். போரற்றநிலையில் ஊரெல்லாம் வாழ எத்தனிக்கும் நேரத்தில் நின்று, நிதானித்து, செல்லும் பாதையைத் தீர்மானிப்பதில் கருத்தாய் இருக்க வேண்டிய நேரத்தில் புத்தாண்டு வருகின்றது. புத்தாண்டுக் கலகலப்பில் புதிய சிந்தனைகள் அடிபட்டுப் போகக்கூடாது. புதிய சிந்தனைகள் எமது எதிர்கால இருப்பை நிலைநிறுத்துவனவாக அமைய வேண்டியதும் அவசியம்.

போட்டிமிகு இவ்வுலகில் 'இருப்பு' ஓர் மிகமுக்கிய விடயப் பொருள். தனிமனித இருப்பாயினும் சரி, ஓர் சமூகத்தின் இருப்பாயினும் சரி சில அடிப்படைக் கட்டமைப்புக்களிலேயே தங்கியுள்ளன. இருப்பை நிலைநிறுத்தும் முயற்சியில் முழுமனதாக ஈடுபடவேண்டியது அனைவரதும் கடனாகும். அணுகுண்டால் அழிக்கப்பட்டகுள்ளமனிதர்களின் உயர்ந்த வெற்றிக்குக் காரணம் அதுவே. பாரிய அழிவுகளினால் சேதமடையாத மனோவலிமை கொண்டு ஓர் உயரிய நாட்டை உருவாக்கியவர்கள் ஜப்பானியர். ஈடு, இணையற்ற உழைப்பால் உலகம் முழுவதையும் தம்மால் ஈர்த்த அவர்களின் வாழ்க்கைமுறையை நாமும் கவனத்தில் எடுக்கவேண்டிய ஒன்றே.

எனவே, நாம் ஒவ்வொருவரும் அதீதமான திறமையுடன் ஓர் புதுப் பூமி அமைக்கப் புறப்படவேண்டிய தருணம் இது. கல்வி, பொருளாதாரம், சமூகநிலை என்ற தளங்களில் ஏற்பட்ட பாரிய தளர்வுகளை நீக்கி, மீண்டும் அவற்றைக் கட்டியெழுப்ப ஒவ்வொருவரும் தம் உன்னதமான உழைப்பை மேம்படுத்தத் துணியவேண்டும். தன்னை மறந்த உழைப்பால், ஒவ்வோர் ஜப்பானியனும் உலகத்தையே ஜப்பானுக்கு அழைத்துவந்தான். எம்மை மறந்து உழைத்தால், நாமும் ஏற்றம் பெறலாம். நாம் ஒவ்வொரு தனிமனிதரும் இவ்வுறுதி எடுத்துக்கொள்வோம். காலத்தை வீணாக்கிக் கழிக்காமல், காலத்தை வென்றவராவோம். அழிவுகளிலிருந்து எம்தேசத்தை மீட்டெடுப்போம், சீரழிவுகளிலிருந்து சீக்கிரமே திரும்பி வருவோம்.

**சித்திரையாள் வந்தாள். சிந்தை திருத்துவித்தாள்**

**முத்திரையாய் உழைப்பிட்டு முயற்சி மடலனுப்பி**

**இத்தரையில் தமிழரென வாழ்வோம், இனி.**

* * *


அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

மீண்டும் மில்க்வைற் நீம் சோப்

விற்பனையாகிறது

வேப்பெண்ணெயில் தயாரிக்கப்பெற்ற சோப் ஒன்றின் விலை – 16.00 ரூபா மெடிகேட்டட் சோப் ஒன்றின் விலை – 16.00 ரூபா மட்டுமே (சி-788)

த.பெ.இல - 77, யாழ்ப்பாணம். மில்க்வைற்.

மங்கலம் நிறைய எங்கும் மகிழ்ச்சியே நிலைத்து நிற்க எமது புதுவருட நல்வாழ்த்துக்கள்

சீமாட்டி (புடைவைக்கடல்)

✳ அனைத்துப் புடைவைகளின் மொத்த சில்லறை வியாபாரிகள்

✳ அழகுசாதனப் பொருட்களின் விநியோகஸ்தர்கள்.

122, பவர் ஹவுஸ் ரோட் யாழ்ப்பாணம்.

T.P. - 222-2196. (சி-802)

புத்தாண்டில் பொங்கும் மங்கலமெங்கும் நிறையட்டும் ஓவ்(F) செற் பிறின்ட், றோணியோ மற்றும் சகல விதமான அச்சு வேலைகளும் வேண்டிய வர்ணத்தில் சிறந்தமுறையில் குறித்த தவணையில் குறைந்த செலவில் உங்கள் விருப்பத்திற்கேற்ற வகையில் செய்ய நீண்டகால சேவையிலுள்ள எம்மை நாடுங்கள்.

தயா அச்சகம் (சி-815)

தயா அச்சகம் கொம்பியூட்டர் ஓவ் (F) செற் பிறின்ட்

138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (நாவலர் பாடசாலை முன்பாக) T.P. 2222881

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிய "சுபானு" புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.




மொறாயஸ்

ஒளிச்சுடர் பல் மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் முக அமைப்புக்கேற்ப நவீனரக பிரேம்களில் மூக்குக் கண்ணாடிகளையும், பல் கட்டுதல், பல்கிளிப் போடுதல் ஆகிய வேலைகளையும் காலதாமதமின்றி தரமாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம் மொறாயஸ் மூக்குக் கண்ணாடி அகம்.

மொறாயஸ்

இல.05, பலாலி வீதி,

(அப்பலோ கிளினிக் முன்பாக) யாழ்ப்பாணம். (சி-801)

எமது உளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

T.V, டெக், ரேடியோ, றைஸ்குக்கர், காஸ்குக்கர், எவர் சில்வர், வீட்டுப் பாவனைப்பொருட்கள், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்களுக்கும் 190 நாடுகளிலிருந்து வெஸ்டர்ன் யூனியன் மூலமாக சில நிமிடங்களில் பணத்தைப் பெறுவதற்கும் நம்பிக்கை நாணயம் வாய்ந்த ஸ்தாபனம்

றாஜு ஸ்ரோர்ஸ்

றாஜு பில்டிங்

67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P.No: 0094-21-222-5224

பணத்தைப் பெறுவோருக்கு அன்பளிப்புக்கள் உண்டு. (சி-803)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

பல்சுவை ஐஸ்கிறீம் வகைகள், சிற்றுண்டி வகைகள், குளிர்பானங்கள் என்பவற்றின் ஊற்று.

ராஜா கிறீம் ஹவுஸ்

ராஜா கிறீம் ஹவுஸ்

36, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம். (சி-800)

புதுவருடத்தில் சமாதானமும், அமைதியும், சுபீட்சமும் மலர எமது வாழ்த்துக்கள்

திருச்செந்தூரன் ரேடிங் கம்பனி

ALPHA, USHA, TELESONIC ஏக விநியோகஸ்தர்கள்

சர்வதேச தரம் வாய்ந்த ALPHA தயாரிப்புக்களான வீட்டு அலுமாரிகள், அயன் சேவ், உருக்கு அலுமாரிகள், அலுவலக உருக்கு மேசைகள், கொம்பியூட்டர் மேசைகள், கொம்பியூட்டர் கதிரைகள், புத்தக அலுமாரிகள்

USHA தயாரிப்புக்களான தையல் மெசின், மின் விசிறிகள், TELESONIC மின் விசிறிகள், NEIL MARINE தண்ணீர்த் தாங்கிகள் போன்றவற்றையும்

பிளாஸ்ரிக் கதிரைகள், ரெக்சீன் வகைகள், மெத்தைகள், குசன் வகைகள், நிலவிரிப்புக்கள், சாப்பாட்டு மேசைகள் ஆகியவற்றையும் நியாயவிலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம் யாழ். நகரில்

திருச்செந்தூரன் ரேடிங் கம்பனி

315, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி-804)

புதுவருட உதயத்தில் அனைவரும் பூரிக்க நியூலங்கா ரேடேர்ஸின் வாழ்த்துக்கள்

வடமாகாண விநியோகஸ்தர்கள்

KELANI CABLES, SUZUKI & TOHATSU OUTBOARD MOTORS



ELECTRONIC, REFRIGERATOR SPARE PARTS

நியூ லங்கா ரேடேர்ஸ் பிறைவேற் லிமிட்டட்

222, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொ. பே. 021-2222062, 2222838. (சி-797)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிய "சுபானு" சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

ஒருதரம் வந்தால் இது ஒன்றே தரம் என்பீர்கள்

Yarl beach in

யாழ் பீச் இன்




(Sea food Restaurant)

No 8, Old Park Road, Jaffna. Tel/Fax: 021 - 2225490

★ குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத அறைகள்
★ கார் தரிப்பிட வசதி
★ மாநாட்டு மண்டபம்
★ இணைக்கப்பட்ட குளியலறை
★ கீழைத்தேய மேலைத்தேய உணவுகள்
★ உல்லாசப் பயணிகளுக்கு, அனுபவம் வாய்ந்தோரின் சேவை

(இலங்கை உல்லாசப்பயணிகள் சபையின் அங்கீகாரம் பெற்றது)

(சி-798) உரிமையாளர்:-சிலுவைராசா.

# சுபானு புதுவருட சிறப்பிதழ்


வாடிக்கையாளர், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
இனிய "சுபானு" சித்திரைப் புத்தாண்டு வாழ்த்தினை
தெரிவிக்கின்றோம்.

**சாந்தி கபே**

இல.278, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுத்தமான சைவ உணவுகளுக்கும் சிற்றுண்டி
வகைகளுக்கும்

(சி-793)

உதயமாகும் புத்தாண்டின் இனிய கொண்டாட்டத்தில்
உங்களுடன் நாமும்

**ABBY MEDICALS**

MANIPAY ROAD, ANAICODDAI.

ஆங்கில மருந்து வகைகளும் பால்மா வகைகளும் விற்பனைக்கு உண்டு.

மற்றும் *ABILA MARKETING SERVICES* இன்
விற்பனையாளர்கள்.

(சி-792)

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது புதுவருட நல்வாழ்த்துக்கள்.

SPECIAL விசேஷம் විශේෂ

**PURE GINGELLY OIL**

**சுத்தமான நல்லெண்ணெய்**

**පිරිසිදු තල තෙල්**

MOIL

தரமான எள்ளில் சுகாதார முறைப்படி
தயாரிக்கப் பெற்றது, கேட்டு வாங்குங்கள்.
எல்லா வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

**A PRODUCT OF MULTI - OIL INDUSTRIES LIMITED , INUVIL.**

(சி-773)

அனைவருக்கும் எமது உளம் நிறைந்த புதுவருட
நல்வாழ்த்துக்கள்

தரமான போட்டோஸ்ரட் பிரதிகள்,
அடையாள அட்டைப்பிரதிகள் கவரிடுதல்
60 வருட றைக்கிளினேர்ஸ்
இம் மூன்றும் இணைந்த சேவைகளை ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள

**சன்லைற் றைக்கிளினர்ஸ்**

பஸ் நிலையம் யாழ்ப்பாணம்

கிளை ஸ்தாபனம்

**சன்லைற் மல்ரி சேவீஸ்**

கச்சேரியடி (சி/780) யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
புதுவருட நல்வாழ்த்துக்கள்
உரித்தாகட்டும்



**V. M. K JEWELLERS**

**வி. எம். கே ஜுவலர்ஸ்**

Genuine 22 Kt Jewellery Manufacturing Jewellers

**KANDY ROAD, CHAVAKACHCHERI,**
**TELE: 070 - 212989, 0777 - 723021**

(சி/775)

அமைதிச் சூழலில் புத்தாண்டைக் கொண்டாடும்
அனைத்து வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
ஆதரவாளர்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**SASIREHA TRADING**

**சசிரேகா ரேடிங் (மிக்ஷர் கடை)**

நிறுவனத்தினர் தரமான மிக்ஷர், பிஸ்கட் வகைகள், ரொபிப்
பைக்கற்றுக்கள், கன்டோஸ் வகைகள், சோடா வகைகள் (**Cool**),
**Elephant** ஐஸ்கிறீம் வகைகள், பால் மா வகைகள், கேக் தயாரிக்கும்
பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், அழகு சாதனங்கள், பிலிம் றோல்,
**BATA, DSI** மற்றும் அனைத்துப் பொருட்களும் எம்மிடம் பெற்றுக்
கொள்ளலாம்.

பருத்தித்துறை வீதி, நல்லூர் சந்தை,
கல்வியங்காடு.

(சி/779)

எமது அபிமானம் மிக்க வாடிக்கையாளர்கள் மற்றும் அன்பர்கள்
அனைவருக்கும் மக்கள் மனமறிந்த மக்கள் வங்கியின்
புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில்
மகிழ்ச்சியடைகின்றது.

**மக்கள் வங்கி**

**மக்களின் மனமறிந்த வங்கி**

பிரதேச முகாமையாளர்,
பிரதேச தலைமைச் செயலகம்,
கன்னாதிட்டி சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி/790)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் யாவருக்கும்
எமது இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

**ராசி சில்க்ஸ் நல்லி சில்க்ஸின் இணைந்த சேவை**

உங்கள் ரசனைக்கும் தேவைக்கும் ஏற்ப சகல
வகையான சாறிகள், பஞ்சாபி அன் சோளிகள், சிறுவர்கள்,
இளையவர்களுக்கான றெடிமேட் ஆடைகள்
அனைத்திற்கும் நாடுங்கள்.

**ராசி சில்க்ஸ்**
70,71 A, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம். 021 - 2225571

**நல்லி சில்க்ஸ்**
121/1, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம். 021 - 2225573

(சி-791)

# மானிப்பாய் மருதடி விநாயகர் இரதோற்சவ சிறப்பு மலர்

# 14.04.2003 சுபானு வருடம்

## மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவரின் சிறப்புச் செய்தி!

ஈழவள நாட்டில் இலங்கும் மானிப்பாய் நகரில் களனிகளும், நீர்த்தடாகங்களும் சூழப்பெற்ற இயற்கை எழில் கொஞ்சும் மருத நிலத்தில் நிலைகொண்டிருக்கும், மருத மரத்தின் நிழலில் வீற்றிருந்து மக்கள் வினைகளை அகற்றி வேண்டுவார் வேண்டுவதை ஈபவன் எங்கள் மருதடியான். விநாயகரை வணங்காது எக்காரியமும் சிறக்காது என்பது யாமறிந்த உண்மையே, அதற்கு ஏற்றாற்போல் ஒரு வருடத்தில் எமது நாட்டில் உள்ள ஆலயங்களின் மஹோற்சவங்களுக்கு கட்டியம் கூறுமாற்போல் எமது ஆலயத்தின் மஹோற்சவமானது மார்ச் 29 ஆம் திகதி ஆரம்பமாகி தமிழர் வருடப் பிறப்பாகிய சித்திரை 01 ஆம் திகதி இரதோற்சவம் நடைபெறுகின்றது. துஷ்ட நிக்கிரகம் இஷ்ட பரிபாலனத்தை குறிப்பது இரதோற்சவம். தமிழர் வருடப்பிறப்பாகிய அன்றே மக்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் கொடுப்பவன் எங்கள் மருதடி விநாயகன்.

தற்போது சில ஆலயங்கள் பல்வேறு நோக்கங்களுக்காக வருடப்பிறப்பன்று இரதோற்சவத்தை தோற்றுவித்திருந்தாலும், மானிப்பாய் மருதடியான் இரதோற்சவம் தமிழர் வருடப்பிறப்பு அன்றுதான் என்பது, பன்னெடுங்காலமாக மக்கள் மனதில் பதிந்ததொன்றே. இப்படிப் பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட இந்த ஆலயமானது பல சமூகப் பணிகளைச் செவ்வனே செயலாற்றி வருவதும் மக்கள் அறிந்ததே. அவற்றுள் நமது வருங்காலச் சந்ததி அறநெறியில் நின்று வாழ்வதற்கு ஓர் அறநெறிப் பாடசாலையை உருவாக்கிச் சிறப்புற நடாத்தி வருவதும் ஒரு சிறப்பம்சமாகும்.

மருதடியானின் மகிமையால் பிறக்கும் இவ்வருடம் நாட்டில் சமாதானமும், அமைதியும் நிலவ இந்நாட்டின் மக்களாகிய நாம் அனைவரும் மருதடியானின் பாதாரவிந்தங்களைப் பற்றி நின்று வணங்குவோமாக.

திரு.த.சிதம்பரநடராசா,
தலைவர், தர்மகர்த்தா சபை.
**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்**



அரிது அரிது மானிடராதல் அரிது என்பது ஔவை வாக்கு. அதிலும் அரியது மருதடி விநாயகர் திருக்கோலம் காண்பது. அமைதி கொஞ்சுகின்ற எழில் பொங்கும் மானிநகரிலே தன்னிகரில்லாத் தலைவனாக விளங்குபவர் விநாயகர். விநாயகருடைய மகோற்சவம் தொடங்கிவிட்டால் ஊரே களை கட்டிவிடும். நாளும் பொழுதும் விநாயகருடைய அருட்பிரவாகத்தையும் கொள்ளைகொள்ளும் அழகையும் காண்பதற்கு அடியவர்கள் காலையிலிருந்து ஆலயத்திற்கு வந்த வண்ணம் இருப்பார். இப்படிப் பெருமை வாய்ந்த மருதடி விநாயகருடைய திருவிழா பங்குனி மாதத்தில் கொடியேறி எம் பாவங்கள் களைந்து சித்திரைப் புத்தாண்டிலே தேரேறிப் புதிய சிந்தனைகள் பிறக்கு எழில் கொஞ்சும் சித்திர ரதத்திலே தேவர்கள் ஆசீர்வதிப்பதுபோல் தேரிலுள்ள மணிகள் ஒலிக்கும் எம்பெருமான் பக்தர்களுக்கு அருள்புரியும் பெருநோக்கோடு ஐந்து முகம் கொண்டு பஞ்சமுக விநாயகராகத் தேரிலே வருகின்ற காட்சியைக் காண ஆயிரம் கண்கள் போதாது. இத்தினத்தில் நாட்டில் அமைதி நிலவ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பிரம்ம ஸ்ரீ பரமேஸ்வர ஜெயகுமார குருக்கள்.
பிரதமகுரு.


பிறக்கும்
இனிய புத்தாண்டில்
சாந்தி சமாதானம் நிலைத்திட
இறைவனை வேண்டுவோமாக...

**யசோ பிளாஸ்ரிக் (Pvt) Ltd**

35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்
T.P: 0777-110610 (சி-826)

சாந்தி சமாதானம் நிலைத்திட
எல்லாம் வல்ல
மருதடி விநாயகரை
வேண்டுகின்றோம்.

**ஜீவலறி நிதுஷ்**

நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரிற்கும் எமது புத்தாண்டு
வாழ்த்துக்கள் உரித்தாகுக.

யாழ்ப்பாண வீதி,
இலங்கை வங்கி முன்பாக
மானிப்பாய். (சி-832)

சாந்தி சமாதானம் என்றும்
நிலைத்திட எம்பெருமான்
விநாயகரை வேண்டுகின்றோம்.

**V.S.M STORES**

வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவரிற்கும் உளம் கனிந்த புத்தாண்டு
வாழ்த்துக்கள்...

மானிப்பாய் வீதி,
மானிப்பாய். (சி-829)

வாடிக்கையாளர், நண்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
இனிய "சுபானு" புத்தாண்டு
வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

234, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி ~ 2222573
(சி-827)

மருதடியான் தேர்த்திருவிழா சிறப்புற
வேண்டுகின்றோம்.

**தனுஸ்**
சிகை அலங்கரிப்பு நிலையம்

நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரிற்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்.

குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை. (சி-831)

மருதடியான் நிழலில்
வீற்றிருக்கும் அனைவரிற்கும்
எமது புத்தாண்டு
வாழ்த்துக்கள்.

**பிறேம் நகைமாடம்**

யாழ்.வீதி,
மானிப்பாய். (சி-830)

பிறக்கும் இனிய புத்தாண்டில்
சாந்தி சமாதானம்
நிலைத்திட இறைவனை
வேண்டுவோமாக...

**TRACTOR SPARES**

Importers and Dealers in Tractors
Spare parts Specilist in Massu
Ferguson Engineers
07, Kannathiddi Road,
Jaffna.
T.P: 2225055 (சி-828)

பிறக்கும் சுபானு வருட புத்தாண்டில்
மருதடி விநாயகரின் இறையருள்
கிடைக்க பிரார்த்திக்கின்றோம்

**மோகன் ஸ்ரூடியோ**

யாழ்.வீதி, மானிப்பாய். (சி-841)

சாந்தி சமாதானம் நிலைத்திட எல்லாம்
வல்ல மருதடி விநாயகரை
வேண்டுகின்றோம்.

**IMS**
**Institute of Micro Systems**
**Computer Training Center**

Market Lane, Manipay
(சி-840)



# சுபானு புதுவருட சிறப்பிதழ்




பவர் செலூலர் டிரேடிங் கம்பனி
நிறுவனத்தினரின்
புத்தாண்டு வாழ்த்துக்கள்





யாழ்.நகரில் முழுவதும்
தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம்,
தீவகம் இணைந்து வழங்கும்
சேவை இது.

உங்களது மேசைத் தொலைபேசி இணைப்பைப்
பெறுதற்கு இன்றே விரையுங்கள் பவர் செலூர் டிரேடிங்
கம்பனி நிறுவனத்திற்கு.
எமது தொடர்புகளுக்கு

T.P.No. 071-399220
0777-242416
FAX- 071-381125
E-mail: Power @ cl.lk.

POWER CELLULAR
1st Fleat
185, Kasthuriyar Road,
Jaffna.
(வின்சர் தியேட்டர் முன்பாக)

(சி-836)

SUNDHARSON

Importers & distributors of electrical items, P.V.C pipes & fittings etc Central Market View, Manipay. T.P/Fax 021-2222751

சுந்தர்சன்

மத்திய சந்தை முன்பாக, பிரதான வீதி, மானிப்பாய்.
உள்ளூரிலேயே மக்கள் சேவையை சிரமேற்கொண்டு
கடந்த 22 ஆண்டு காலமாக

☆மின்சார உபகரணங்கள் ☆அலங்காரப் பொருட்கள்
☆P.V.C நீர்க்குழாய்கள். இணைப்புக்கள் ☆L.G T.V., fridge, washing machine

போன்றவற்றை நிதானம், நியாயம், உத்தரவாதத்துடன்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

(சி-833)





அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

GREAVES LIMITED
P.E.U.-CHENNAI



தில்லையம்பதி மோட்டோர்ஸ்



இல.236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021-2222488, 021-2223820
AGENTS FOR - GREAVES, SPARE PARTS

☼ விவசாய நீர் இறைக்கும் இயந்திரம். மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்.
☼ மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி/778)

## புத்தாண்டின் பொலிவு காணும் இவ்வினிய நாளில்
## இன்பம் பொங்க அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்




"சோலைக்குயில் கூவும் ஒலி
காற்றினிலே குலாவும், இருளகலும்
ஒளியினிலே முகமலரும் அதனாலே

மேளதாளம் மணி ஒலிக்க
புதுவருடம் இதோ பார்
உங்கள் நலம் சௌபாக்கியம்
அதுவேயெம் மன வாஞ்சை"







COMMERCIAL BANK
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

(சி-807)

# சுபானு புதுவருட சிறப்பிதழ்



புதுப்பொலிவுடன் உதிக்கும் புதுவருடத் திருநாளில் எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் உளம் பூரிக்கின்றோம்.

கதிரைகள், மெத்தைகள், குசன் செற்றிகள் என்பவற்றைச் சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

## மற்றாஸ் தளபாட நிலையம்

233, 395 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- முன்பு 137, கஸ்தூரியார் வீதியில் இயங்கிய நிலையம் இப்பொழுது மேற்குறித்த முகவரியில் இயங்குகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

(சி/777)

---

சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களை வாடிக்கையாளர், பாவனையாளர், ஆதரவாளர் அனைவருக்கும் மகிழ்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்

இதமான புகையின்பத்திற்கு **ஆர். வி. ஜி. பீடிகள்**

## ஆர்விஜி பீடி ஸ்தாபனம்

58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

சகல வகையான ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள், பால்மா வகைகள் யாவும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள

## ஆர்.வி.ஜி. மெடிக்கல்ஸ்

504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-786)

---

புத்தாண்டில் சமாதானமும் அமைதியும் சுபிட்சமும் மலர யசோவின் வாழ்த்துக்கள்

## இப்பொழுது யாழ்ப்பாணத்திலேயே

உங்கள் வியாபார நிலையத்திற்கு பெயர்ப்பலகைகளை

☆ நியோன் பல்பிலோ ☆ டிஜிட்டல் பிறிண்டிலோ ☆ பிளாஸ்ரிக்கிலோ ☆வர்ணத்தாலேயோ செய்வதுடன், பாடசாலைக்கான

☆ மொனிட்டர், பிறிபெக்ட் பச் ☆ நினைவுச்சின்னங்கள்

மற்றும் ☆ கீரெக்ஸ் ☆ பதாதைகள் ☆ ஸ்கிறீன் பிறிண்ட் ☆ இறபர் ஸ்டாம் ☆ சினிமா சிலைட் ☆ வீட்டுப் பெயர்

தரமான முறையில் கணனியில் வடிவமைத்துப் பெற்றுக்கொள்ள

(சி-787)

## யசோ

35 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 0777-110610

மேற்படி வேலைகளை பயில விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்

---

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

உலகெங்கிலுமுள்ள உங்கள் உறவினர்களுடன்

## INTER NET

(BROWSING CENTRE) மூலம்

குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்ள

## ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்

இலங்கை முழுவதும் 24 மணி நேரத்தில் துரித தபால்/ பொதிகள் சேவை

(சி-796)

**SRI MURUGAN**

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

303, k.k.s Road, Jaffna. T.P - 021- 2222670, 2223588

Fax - 2223214, Email - del - smskr @ eureka.lk

---

மலரும் புத்தாண்டு அனைவருக்கும் இனிதாக அமைய எமது வாழ்த்துக்கள்

CORAL TASTY

சுகாதார முறைப்படி சுத்திகரிக்கப்பட்டு தயாரிக்கப்படுகின்ற கோறல் ரேஸ்டி தயாரிப்புக்களை ஒருமுறை அருந்திப்பாருங்கள் மறுமுறை வாடிக்கையாளராவீர்கள்.

கோறல் ரேஸ்டியின் தயாரிப்புக்கள் பல. அவற்றில் சில



☆ நெல்லிரசம்

☆ கிறேப்ஸ் கோடியல் ☆ ஜாம் வகைகள்

☆ ஒரேஞ் கோடியல் ☆ ஐசிங் சுகர்

☆ அன்னாசி கோடியல் ☆ ஊறுகாய் இன்னும் பல

மேற்படி தயாரிப்புக்களை சகல கடைகளிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

கோறல் ரேஸ்டி (F) பூட் இன்டஸ்றீஸ்,

ஆடியபாதம் வீதி, கேணியடி வைரவர் கோவிலடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(சி-789)

---

பழைமையின் சுவடுகள் மறைந்து சமாதான சுகவாழ்வு மலர எமது வாழ்த்துக்கள்

உங்கள் வனப்புக்கு மெருகூட்டிடும் வகையிலான மூக்குக்கண்ணாடிகளைப் பெறவும் அழகிய சங்குப்பற்களைப் பொருத்தவும், மிதப்பு பற்களுக்குச் சிறந்த முறையில் கிளிப் போடவும் நாடுங்கள்

## எரிக்கனெல்

மூக்குக்கண்ணாடியகமும், பல்கட்டுமிடமும்

564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P. 2222486 கிளை: கொக்குவில், சுன்னாகம். (சி-795)

---

புலர்ந்துள்ள புத்தாண்டில் மகிழ்ச்சியும், நம்பிக்கையும் பொங்கிப் பூரிக்க எமது வாழ்த்துக்கள்

## மலிவு விற்பனை

20 % முதல் 50 % வரை

புதுக்கணக்குப் போடவிருப்பதால் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், மருத்துவம், கணினி, பொறியியல், இந்திய பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள் போன்றன மலிவு விலையில் விற்பனையாகின்றது.

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

## ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி-794)

---

தமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்தினைத் தெரிவிக்கின்றது.

RENY

## றெனி பல் மூக்குக் கண்ணாடி அகம்

❁ கண்களை பரிசோதித்து கண்ணாடி பெற்றுக்கொள்வதற்கு

❁ உறுதியான பற்களை கட்டிக்கொள்வதற்கு

❁ மிதப்புப் பற்களுக்கு "கிளிப்" செய்து கொள்வதற்கு

நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

றெனி பல் மூக்குக் கண்ணாடி அகம்.

பிரதான வீதி, (வேலாயுதம் பாடசாலைக்கு அருகில்) பருத்தித்துறை

இல. 288, நாவலர் வீதி, யாழப்பாணம்.

(சி/776)

---

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

கர்ப்பிணித் தாய்மாருக்கும், சிறார்களுக்கும் ஏற்ற போஷாக்கு நிறைந்த சத்து மா



## ஜீவாகாரம்



தொலைபேசி: 2223565

(சி/774)

அண்ணா தொழிலகம் இணுவில்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரது உள்ளங்களிலும் இன்றுபோல் என்றும்
மகிழ்ச்சி பொங்க எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

SLS அங்கீகாரம் பெற்ற

ராம்கோ

கூரைத்தகடுகளை யாழ்ப்பாணத்தில் எங்கும்
பெற்றுக்கொள்ளலாம்






(சி-822)

புதுவருடத் திருநாளாம் இன்றுபோல் என்றும் எல்லோர்
உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்க எமது வாழ்த்துக்கள்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து

SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
VSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.

ராம்கோ



MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து



ராம்கோ

(சி-808)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

கூழும் குடியும் ஒருங்குஇழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு

- திருக்குறள்.

# நமது நோக்கு

## மறைக்கப்பட முடியாத உண்மைகள் !

ஒன்றுக்குப்பின் ஒன்று முரணாகவும், ஊருக்கும் நேரத்திற்கும் ஒரு கதையாகவும் பேசிவரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - தமிழ்மக்கள் வேண்டிநிற்கும் சுயாட்சியை நியாயப்படுத்துவதற்கான வலுவான கருத்தொன்றைப் பற்றிப் பேசியிருக்கின்றார்.

அண்மையில் இந்தியா சென்றிருந்த அவர், சென்னையிலிருந்து வெளிவரும் 'த ஹிந்து' நாளிதழுக்கு வழங்கிய பேட்டியிலேயே - 'தன்னை மறந்து' இந்த உண்மையை அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

நாட்டின் வடக்கிலும், கிழக்கின் சில பகுதிகளிலும் தனியான அரசு ஒன்றுக்கான அடித்தளத்தை விடுதலைப் புலிகள் அமைத்துவிட்டதாக அவர், ஹிந்து நாளிதழின் செய்தியாளர் அமித் பர்வாவுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

அவர் - இந்த உண்மையை, யதார்த்தத்தை எடுத்துக் கூறிய காரணம் - அல்லது, இந்தக் கருத்தினூடாக அவர் பேசமுற்பட்ட விடயம் வேறாக இருந்தாலும் -

தமிழருக்கு வழங்க வேண்டிய சுயாட்சியை வலியுறுத்தக்கூடிய, உறுதிப்படுத்தக்கூடிய முக்கிய அம்சத்தை அவர் தானறிந்தோ அறியாமலோ ஏற்றுக்கொள்ளுமாப்போல கருத்துத் தெரிவித்திருக்கிறார் என்பது இதனூடாகத் தெரியும் விடயமாகும்.

வடக்கு - கிழக்கில் தமிழர்களுக்கென தனியான அரசுக்குரிய அம்சங்கள் ஏற்படத்தொடங்கிவிட்டமையானது - இன்று நேற்றல்ல - போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில், அதனோடு இசைந்ததாகவே தனியரசுக்கான கட்டுமானங்கள் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டு வந்திருக்கின்றன.

களத்தில் நின்று போராடுவதோடு - நிர்வாக ரீதியாகவும், பொருளாதார வழியிலும், அரசியல் சார்ந்தும், மக்கள் நலன்களிலும், சமூக ஒழுங்கமைப்பிலும், இன்னும் இன்னும் பிறதுறைகளிலும் - விடுதலைப் புலிகள் தேர்ந்ததொரு கட்டமைப்பை உருவாக்கியிருக்கின்ற விடயம் - சர்வதேச மட்டத்திலேயே வியப்பையும், பாராட்டையும் பெற்றுத் தந்திருக்கின்றது.

இந்தக்கட்டமைப்பானது - தமிழர்கள் தம்மைத்தாமே ஆளக்கூடிய, சுயாட்சி உரிமை கொண்டவர்கள் என்பதை உலகிற்கு அழுத்தமாகவே எடுத்துரைத்தும் வருகின்றது.

அரசாங்கத் தரப்பில் கூட - பிரதமருட்பட முக்கிய அமைச்சர்கள் பலருமே இந்த நிதர்சனமான உண்மையை ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டியவர்களாகவேயுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் நீதி, நிர்வாகக் கட்டமைப்புப் பற்றியும், காவல்துறை தொடர்பாகவும் அண்மையில் சர்ச்சைகள் கிளப்பப்பட்டபோதும் - இறுதியில், அவ்வாறானதொரு கட்டமைப்பை உருவாக்க நேர்ந்ததன் அவசியத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே ஏற்றுக்கொள்ளும் பாங்கில் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

அவ்வேளையில் - பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டும், தினத்துக்கும் அறிக்கைகள் விடுத்தும் - விடுதலைப் புலிகளின் சட்டம் ஒழுங்கு காக்கும் நிர்வாகத்தைப் பற்றிப் பலவாறும் பேசிவந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - இன்று, தமக்கென தனியரசு ஒன்றுக்கான கட்டமைப்பைப் புலிகள் அமைத்துவிட்டதாகக் கூறும் நிலைக்கு வந்திருக்கிறார்.

அமைதிப் பேச்சுக்களின் பின்னர் - விடுதலைப் புலிகள் தமக்குத் தேவையான சகலவற்றையும் பெற்றுவிட்டார்கள் என்ற பொருள்படவே அவர் இதனைக் கூறியிருக்குமிடத்து -

உண்மையில், விடுதலைப் புலிகளின் நிர்வாகச் செயற்பாடுகள் அதற்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டு மிக வலுவுடன் பேணப்பட்டு வருவதும், இவற்றில் சில விடயங்களில் - போர் நிறுத்தத்தின் பின்னரே விடுதலைப் புலிகள் தளர்வுகளை மேற்கொண்டதும் சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

எவ்வாறாயினும் - 'தனியரசை அமைத்துவிட்ட' விடுதலைப் புலிகளுடன் - இனி எவ்விதம் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள அவர் சம்மதிக்கப் போகின்றார் என்பதும்,

இலங்கை அரசாங்கத்துக்குச் சமதையாகப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் ஆற்றலையும், பலத்தையும் விடுதலைப் புலிகள் பெற்றிருக்கும் நிலையிலும் - அதனைத் தானே ஒத்துக்கொண்டிருக்கும்போதும் - தமிழர் தரப்புக்கு எத்தகைய தீர்வொன்றைத் தர அவர் முன்வருவார் என்பதும் - அனைவராலும் எதிர்பார்க்கப்படும் விடயங்களாகும்.

ஆனால் - தான் பேசுவதைத் தானே மறுக்கும் அல்லது முரண்படும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - 'த ஹிந்து' நாளிதழுக்கு வழங்கிய கருத்தைத் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்வாரா என்பதும்,

கொழும்பு வந்ததும் அவர், மீண்டும் - விடுதலைப் புலிகள் இன்னமும் ஆயுதக்குழுவென்றே அறிக்கைவிட்டாலும் ஆச்சரியப்படக்கூடியதல்ல என்பதும் - இங்கு முக்கியமானவையாகும்.

இலங்கை இனப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் - சில உண்மைகளை, யதார்த்தத்தை சிங்களத் தலைவர்கள் புரிந்து கொள்ளாதவரை - புரிந்துகொண்டும் அதனை ஏற்றுக்கொள்ள முன்வராதவரை - ஏற்றுக்கொள்வனவற்றின் அடிப்படையில் தீர்வுகளைக்காண முயற்சிக்காதவரை - தமிழர்களுக்கு நீதியான, கௌரவமான, தன்னாட்சி உரிமைமிக்க அதிகாரப்பரவலாக்கம் சிங்களத் தரப்பினரால் வழங்கப்படுமா என்பது சந்தேகத்திற்குரியதாகவே தொடர்ந்திருக்கும்.

# புற்றுநோய் வைத்திய கிராமம்; 4 இடங்கள் பரிசீலனையில்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில், புற்றுநோய் சிகிச்சைக் கிராமம் அமைப்பது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடல் பற்றி பத்திரிகையாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் கூட்டம், நேற்று முன்தினம் யாழ். அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய காரியாலத்தில் இடம்பெற்றது.

டாக்டர் வை.தியாகராஜா தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், கருத்து வெளியிட்ட யாழ். போதனா வைத்தியசாலை பேராசிரியர் வி.குணாநந்தம் -

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில், புற்றுநோய் வைத்தியசாலைக் கிராமம் ஒன்று மிகவும் தேவையானது. இதற்கான திட்டவரைவுகள் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது. இதன் அடிப்படையில் நான்கு இடங்கள் தெரிவுசெய்யப்பட்டு, திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது.

இதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள குழுவிடம் அறிக்கைகள் யாவும் கையளிக்கப்பட்டுள்ளன. அவர்கள் 24 ஆம் திகதி முடிவினை வெளியிடுவார்கள். அதற்கிடையில் பொது மக்கள் தம்முடைய கருத்துக்களையும் வெளியிடமுடியும். அதனை யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் எழுத்துமூலம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்- புற்றுநோய்க்கு அனைத்து இடங்களிலும் கோபால்ட் வைத்திய முறையே காணப்படுகின்றது. இது, அதிக பக்கவிளைவுகளைக் கொடுக்கக்கூடியது. **LINEAR ACCELATOR** என்னும் இயந்திரமே பக்க விளைவற்ற சிகிச்சை அளிக்கக்கூடியது என்று தெரிவித்த அவர், குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும் அவ்வறிக்கை கொழும்புக்கு அனுப்பப்பட்டு, ரோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் தெரிவித்தார். (சு)

# ஒன்றரை இலட்சம் மக்கள் குடாநாட்டில் மீள்குடியமர்வு

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து இதுவரை 41 ஆயிரத்து 598 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 742 பேர், யாழ்ப்பாண மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ளனர் என யாழ். மாவட்ட அரசசெயலகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 10 ஆயிரத்து 232 குடும்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 2 ஆயிரத்து 680 குடும்பங்களும் வந்துள்ளன எனப் புள்ளிவிபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (100)

# துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் இராணுவச் சிப்பாயின் சடலம்!

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி, ஒட்டுவெளிப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் இராணுவச் சிப்பாய் ஒருவரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை காலை 11.15 மணியளவில் இந்தச் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இந்தச் சிப்பாய் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என்று நம்பப்படுவதாகவும், இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை இராணுவப் பொலிஸாரும், கொடிகாமம் பொலிஸாரும் மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

# சீன ட்ரோலர் மூழ்கடிப்பு விவகாரத்தால் கடற்படைக்குள் முரண்பாடுகள் அதிகரிப்பு!

முல்லைத்தீவுக் கடலில் சீன மீன்பிடி ட்ரோலர் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம், கடற்படையினருக்குள் முரண்பாடுகளை உருவாக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் நடந்தபோது, அந்த நடவடிக்கைப் பிரிவில் கடற்படையின் ஆறு பீரங்கிப் படகுகள் இருந்தன. ஆனாலும் தாக்குதல் நடத்தப்பட்டு 26 மணி நேரத்துக்குப் பின்னரே கடற்படை சம்பவம் இடம்பெற்ற பகுதிக்குச் சென்றது.

எப்படி இந்தத் தாக்குதல் கடற்படையினருக்குத் தெரியாமல் நடந்தது என்பது பற்றியும், சம்பவம் நடந்த இடத்துக்குக் கடற்படையினர் 26 மணி நேரத்தின் பின்னரே சென்றது குறித்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

கடற்படையின் 6 முதல் 8 படகுகள் கிழக்குக் கடற்பரப்பில் வருண கிரண நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றன. முல்லைத்தீவுக் கரையிலிருந்து 10 முதல் 15 மைல் தொலைவிலே ஆயுதக் கடத்தலைத் தடுக்க இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலைமையில், கடற்படையினர் கண்காணிப்பை மீறி இவ்வாறான சம்பவம் நடந்திருப்பது, கடற்படையின் பலவீனமா என்றும் கேள்விகளை எழுப்பியுள்ளது.

அதேவேளை, இந்தச் சம்பவம் குறித்து கண்காணிப்புக் குழு வெளியிட்ட அறிக்கையைப் பற்றி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருத்து கூறியிருப்பது இராஜதந்திர நெறிமுறைகளுக்கு முரணானது என்றும் கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கண்காணிப்புக் குழுவை நோர்வே அரசாங்கமே நியமித்திருந்தது. எனவே, கண்காணிப்புக்குழு பற்றி எந்தத் தகவலும் நோர்வே தூதரகம் ஊடாகவே கையாளப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## மூன்றாவது சக்தி தொடர்புபட்டதாக

# கண்காணிப்புக் குழு கூறியுள்ளமை நம்பகத் தன்மையைப் பாதிக்கின்றது

## பேனாட் குணதிலக கருத்து

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவுக் கடலில் சீன மீன்பிடி ட்ரோலர் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்துடன் கடற்படையோ, புலிகளோ சம்பந்தப்படாத மூன்றாவது சக்தி ஒன்று தொடர்புபட்டிருப்பதாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கூறியிருப்பது மக்கள் மத்தியில் அதன் மீதான நம்பகத்தன்மையைக் குறைத்திருப்பதாக அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேனாட் குணதிலக தெரிவித்தார்.

தாம் அந்த விடயம் தொடர்பாகக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரெலவ்சனுடன் பேச்சுக்களை நடத்தியதாகவும் தெரிவித்த அவர், இது அரசின் திருப்தியின்மையை வெளிப்படுத்துவதான கருத்து அல்ல என்றும், அரசின் பார்வையையே சொல்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சீன ட்ரோலர் மீதான தாக்குதலில் உயிரிழந்தோருக்கு நஷ்டஈடு வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் - தாக்குதலுக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டதாகிவிடும் என்றும் பேனாட் குணதிலக மேலும் தெரிவித்தார்.

# பழுதடைந்த அரிசி கோண்டாவிலுக்கு!

(வடமராட்சி)

நிவாரணத்திற்கு வழங்குவதற்காகப் பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் கிலோ அரிசி (3000 மூடைகள்) ஏற்றப்பட்டு வருகிறது.

கடந்த வருடம் ஐப்பசி மாதம் நிவாரணத்திற்கு வழங்குவதற்காகப் பருத்தித்துறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் களஞ்சியத்தில் அரிசி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

வண்டுகள், புழுக்கள் பிடித்தநிலையில், அவற்றினை அகற்றுமாறு பலமுறை அரச அதிபருக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த அரிசி, லொறிகள் மூலம் ஏற்றப்பட்டு கோண்டாவில் களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (23)

## வட்டு. இந்து வாலிபர் சங்கத்தினால்

# ஆயுர்வேத வைத்தியசாலைக்கு மருந்துப் பொருட்கள் அன்பளிப்பு

வலி.மேற்கு பிரதேச சபையின் - வட்டுக்கோட்டை கிராம சபையின் உபஅலுவலகத்தில் செயற்பட்டு வரும் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கு, வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் மருந்துகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

வாரத்தில் திங்கள், புதன் ஆகிய இரு தினங்களில் மட்டும் இயங்கிவரும் இந்த வைத்தியசாலையில், மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவந்ததை அறிந்த வாலிபர் சங்கத்தினர், ஒரு தொகுதி மருந்துகளைக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளனர். (118)

# எதிர்வரும் ஜூன் மாதத்தில் அமைச்சரவையில் மாற்றம்

எதிர்வரும் ஜூன் மாதம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க- அமைச்சரவையை மாற்றியமைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த அமைச்சரவை மறுசீரமைப்பு நடவடிக்கையின்போது பல அமைச்சர்கள் நீக்கப்படவுள்ளதாகவும், புதிய முகங்கள் அமைச்சரவையில் இடம்பிடிக்கலாம் எனவும் தெரியவந்துள்ளது.

அமைச்சர்களின் திருப்தியற்ற சேவை, மக்களின் எதிர்பார்ப்புக்கேற்ப செயற்படாமை போன்ற காரணங்களாலேயே இந்த அமைச்சர்கள் நீக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

# அம்மா என்றால் நல்லாட்சி என்று சொன்னால் மட்டும் போதுமா?

"நாள்தொறும் நாடி முறை
செய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்"
(குறள் 553)

இதன் பொருள் நாள்தோறும் ஆராய்ந்து ஆட்சி செய்யாத அரசனின் நாடு பயன் இழக்கும் ஆராய்ந்து ஆட்சி செய்யாத மன்னவன் நாடு நாள்தோறும் கெடும் என்றும் உரை கொள்ளலாம்.

எது எப்படி இருப்பினும் இந்தத் திருக்குறளை ஜெயலலிதா படித்திருப்பார் என்று நம்பவில்லை.

"ஜெயலலிதாவை காவிரி கண்ட காவியத்தாய், தமிழகத்தின் காவல் தெய்வம், இந்தியாவின் ஈடு இணையற்ற வழிகாட்டி, ஐ.நா. அவையே அறிவுரை கேட்கும் ஆற்றல் அரசி, அகில உலகப் பெண்குலத்து பெருமகள், எங்கள் திருமகள், கலைக்குக் கலைமகள், முதல்வருக்கு எல்லாம் முதல்வர், சத்தியத் தாயின் உத்தம புத்திரி, சரித்திர நாயகி, எங்கள் தாய், இதய தெய்வம், புரட்சித்தலைவி, டாக்டர் அம்மா என்று அ.தி.மு.க. அமைச்சர்கள் ஒரு நாளைக்கு நூற்றியெட்டுத் தரம் துதிபாடுகிறார்கள். தெருமுனையிலோ, கட்சி மேடையிலோ அல்ல. சட்டசபையில்!"

"நெல்லையில் கொசுத்தொல்லை அதை ஒழிக்க மருந்து தெளிக்கப்படுமா?" என்று சட்டசபையில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒரு கேள்வி கேட்டால் - அடிமை சாசனம் வாசித்தே பழக்கப்பட்ட அமைச்சர் கூறும் பதில் என்ன தெரியுமா?

"அன்னை பராசக்தி, மேரிமாதா, மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி, காசிவிசாலாட்சி, இந்தியாவின் எதிர்காலப் பிரதமர், சிந்தனைச் செல்வி, அறிவுஜீவி, அகண்ட காவிரி, உருண்டை உலகின் சிறந்த தலைவி, வீரத்தாய், வெற்றித் திருமகள், கொற்றவைத் தெய்வம், கல்வியில் கலைமகள், பொறுமையில் நிலமகள், இதய தெய்வம், புரட்சித் தலைவி, டாக்டர் அம்மா ஆட்சி செய்யும் செந்தமிழ் நாட்டின் நெல்லை மாநகரில் கொசு ஒழிக்க மருந்து தெளிக்கப்படும்!"

இன்னொரு அ.தி.மு.க. சட்டசபை உறுப்பினர் எழுந்து "பன்றி மேய்த்துக்கொண்டிருந்த என்னைத் தேடிக் கண்டுபிடித்து, எம்.எல்.ஏ. ஆக்கி உயர்த்திப் பிடித்து அழகு பார்க்கும் அம்மாதான் உலகநாயகி" என்று பேசுகிறார்.

அ.தி.மு.க. இணையத்தளத்தில் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா அம்மா பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

"அம்மா என்றால் அன்பு"
"அம்மா என்றால் அமைதி"
"அம்மா என்றால் ஆதரவு"
"அம்மா என்றால் ஆட்சி"
"அம்மா என்றால் நல்லாட்சி"

ஆனால், இப்படி போற்றிப் பாடினாலும், இந்த அடிவருடிகளில் ஒருவராவது 'அம்மாவுக்குத் திருக்குறள் தெரியும், அதை அவர் கரைத்துக் குடித்திருக்கிறார், அதற்கு உரை எழுதவும் எண்ணியுள்ளார்' என்று தம்பட்டம் அடிப்பது கிடையாது. அந்தத் தைரியம் இன்னும் அவர்களுக்குப் பிறக்கவில்லை!

"அம்மா அம்மா" என்று அ.தி.மு.க. அமைச்சர்கள் தொட்டு, அடிமட்டத் தொண்டன்வரை ஜெயலலிதாவைப் புகழ்கிறார்கள். ஜெயலலிதாவோ 'நாட்டு மக்கள் எல்லோருக்கும் நான்தான் அம்மா' என்று அடிக்கடி கூறிவருகிறார்.

சும்மா, அம்மா என்றால் நல்லாட்சி என்று சொல்லிவிட்டால் போதுமா? அம்மாவே தெய்வம் என்று பாடிவிட்டால் போதுமா? அதற்குக் கொஞ்சமாவது இலக்கணமாக வாழவேண்டாமா?

இதை எழுதிக் கொண்டிருக்கும் போது, ஒரு செய்தி கிடைத்தது. தி.மு.க. இளைஞர் அணித்தலைவர் - மு.க.ஸ்டாலின் நள்ளிரவில் அவரது வீட்டு மதில் ஏறிப் பாய்ந்த தமிழ்நாட்டுக் காவற்துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்பது தான் அந்தச் செய்தி. காவற்துறையினர் என்று ஒரு மரியாதைக்குத் தான் சொல்கிறேன். உண்மையில் அவர்கள் ஏவல் நாய்கள்!

மு.க.ஸ்டாலின் சாதாரண பேர்வழியல்ல. முன்னாள் சென்னை மாநகரசபையின் மேயர், இந்நாள் சட்டசபை உறுப்பினர், வருங்கால முதல்வர் எனவும் பரவலாகப் பேசப்படுபவர்.

ஆனால், அம்மா காவற்துறையை ஏவி, அவரை ஒரு கிரிமினல் குற்றவாளியைக் கைது செய்வதுபோல்- பேட்டைச் சண்டியனைக் கைதுசெய்வதுபோல், நள்ளிரவில் தூக்கத்திலிருந்து, தட்டி எழுப்பிக் கைதுசெய்திருக்கிறார்.

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிக் கோட்டையில் குடியேறிய ஜெயலலிதா - முதல்வேலையாக தி.மு.க. தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான கலைஞர் மு.கருணாநிதியையும் இப்படித் தான் காவற்துறையை ஏவி நள்ளிரவில் கைதுசெய்தார். கதவுகளை உடைத்துக்கொண்டு உட்புகுந்த



தொடரும் கைதுகள் - ஸ்டாலினும் கூட.

பொலிஸ் அதிகாரிகளில் ஒருவர் 'அவனைத் தூக்கடா', 'இழுத்துட்டு வாங்கடா' எனக் காவற்துறைக்குப் பழக்கப்பட்ட தமிழில் கத்த, ஏனைய காவலர் கொறகொற எனக் கருணாநிதியை மாடிப்படிகளில் இழுத்து வந்தார்கள்.

காவற்துறைத் துணை ஆணையாளர் முகமது அலி - கருணாநிதியின் கையைப் பிடித்து தனது பலத்தை எல்லாம் வைத்து அழுத்தியதால், அவருக்குக் கடுமையான வலி ஏற்பட்டது. அதன்பின் கலைஞர் கருணாநிதி காவல் நிலையம், நீதிபதியின் வீடு, பின்னர் சென்னை மத்திய சிறைக்குக் கொண்டுசென்று அடைத்த அந்த நாடகக் கதை உங்களுக்குத் தெரியும்.

ஜெயலலிதா அடைக்கப்பட்ட அதே சிறைச்சாலையில், அதே கொட்டடியில்தான் கருணாநிதியும் அடைக்கப்பட்டார். ஒரு வேற்றுமை- ஜெயலலிதாவிற்கு ஒரு ஏசி அறை கொடுத்து, வீட்டிலிருந்து மெத்தை, படுக்கை, 15 தலையணைகள், 10 துப்பட்டிகள், தோடம்பழங்கள், எவர்சில்வர் தட்டில் இட்லி, சப்பாத்தி சாப்பாடு, வேறு தேவையான வசதிகளை கருணாநிதி செய்து கொடுத்திருந்தார். ஆனால், ஜெயலலிதாவோ - கலைஞருக்கு 12x12 அடி நீளமுள்ள ஒரு அறை, ஒரு சாதாரண இரும்புக் கட்டில், மெல்லிய விரிப்பு, ஒரு காற்றாடி, அலுமினியத் தட்டில் சிறைச்சாலையில் சமைக்கப்பட்ட உணவு இவற்றையே வழங்கினார்!

இப்போது ஸ்டாலின் கடலூர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். இதே சிறையில்தான் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் சிறை வைக்கப்பட்டுள்ளார்.

அது சரி. மு.க. ஸ்டாலின் எதற்காக நடுநிசியில் காவற்துறையால் கைது செய்யப்பட்டார்? யாரை யாவது கொலை செய்தாரா? யாருக்காவது கொலைப் பயமுறுத்தல் விடுத்தாரா? மேம்பாலம் கட்டியதில் ஊழல் செய்தரா? கொடுங்கல் வாங்கலில் மோசடி செய்தாரா?

இதில் ஒன்றுமே இல்லை. பின் ஏன் கைது செய்யப்பட்டார்? அதுவும் நள்ளிரவில்?

எல்லாவற்றுக்கும் அம்மாவின் பிள்ளைகள்தான் காரணம். ஆமாம் பள்ளிப் பிள்ளைகள்தான் காரணம்.

சென்னை காமராஜர் சாலையிலுள்ள இராணிமேரி கல்லூரியை இடித்துவிட்டு, அங்கு தலைமைச் செயலகம் மற்றும் சட்டசபை வளாகம் கட்ட - தமிழக அரசு முடிவெடுத்தது. இதனைக் கண்டித்து மாணவிகள் சாலைமறியல் போராட்டத்தில் குதித்தார்கள். தமிழக அரசு பதிலடியாகக் கல்லூரிக் கதவுகளை இழுத்து மூடிவிட்டு, மாணவிகளை வெளியேறுமாறு கூறியது. மாணவிகளது போராட்டத்துக்கு ஆதரவாக இருந்த கல்லூரி அதிபர் இரவோடு இரவாக இடம்மாற்றம் செய்யப்பட்டார்.

இதைத் தொடர்ந்து அக்கல்லூரி மாணவிகள் உள்ளிருப்புப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டத்துக்குப் பா.ஜ. கட்சி நீங்கலாக எல்லா எதிர்க்கட்சிகளும் முழு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், கல்லூரி மாணவிகளைச் சந்தித்து ஆதரவு தெரிவிக்க கடந்த 8 ஆம் திகதி முன்னாள் மேயரும், சட்டமன்ற உறுப்பினருமான மு.க.ஸ்டாலின், முன்னாள் அமைச்சர் பொன்முடி மற்றும் பலர் - இராணிமேரி கல்லூரிக்குச் சென்றனர். அங்கு அவர்களைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் தடுத்து நிறுத்தினர். 'கல்லூரிக்குள் அனுமதியின்றிச் செல்லக்கூடாது' என்று தடுத்தனர்.

ஆனால், காவற்துறையினரையும் மீறி ஸ்டாலினும், பொன்முடியும், மற்றவர்களும் உள்ளே சென்றனர். கல்லூரிக்குள் சென்ற அவர்கள் மாணவிகளைச் சந்தித்து அவர்களது போராட்டத்திற்கு முழு ஆதரவு தெரிவித்தனர்.

இது குறித்து இராணிமேரி கல்லூரியின் முதல்வர் இராஜலட்சுமி- மெரீனா கடற்கரை காவல் நிலையத்தில் முறைப்பாடு கொடுத்தார். அப் புகாரில் ஸ்டாலின், பொன்முடி மற்றும் பலர் கல்லூரிக்குள் அத்து மீறி நுழைந்ததாகத் தெரிவித்தார். இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் காவற்துறையினர் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

அற்பர்களுக்குப் பவிசு வந்தால் அர்த்தராத்திரியில் குடைபிடிப்பார்கள் என்பார்கள். ஜெயலலிதா வலிய வந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார்.

இராணிமேரி கல்லூரி அன்றைய சென்னை மாகாண ஆங்கில அரசினால் பெண்களுக்கு மட்டுமே தொடக்கப்பட்ட கல்லூரி. 123 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. மிட்டாய் மிராசுதார் பிள்ளைகள் படிக்கும் கல்லூரியல்ல, சாதாரண வீட்டுப் பிள்ளைகள் படிக்கும் கல்லூரி.

தலைமைச் செயலகம் கட்ட வேறு இடம் இல்லையா? இருக்கிறது. முதலில் பழைய மாமல்லபுரத்தை அண்டிய இடத்தில்தான் தலைமைச் செயலகம் கட்டுவதாக இருந்தது. பின்னர்தான் கடற்கரை ஓரமாகவுள்ள இராணிமேரி கல்லூரி இருக்குமிடம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

முன்னைய முடிவில் ஏன் திடீர் மாற்றம்? நெருக்கடி நிறைந்த சென்னை நகரை விட்டுவிட்டுப் புறநகர்ப் பகுதியில் தலைமைச் செயலகத்தைக் கட்டுவதுதானே? அது தானே புத்திசாலித்தனம்? பின் ஏன் ஜெயலலிதா பிடிவாதம் பிடிக்கிறார்?

எல்லாம் ஒரு வாஸ்து சோதிடரின் ஆலோசனைதான். 'கோட்டை உங்களுக்கு இராசியில்லை. இராணிமேரி கல்லூரி இருக்கும் இடத்தில் வாஸ்து சாத்திரப்படி இன்னொரு தலைமையகத்தைக்கட்டி, அங்கு குடியேறுங்கள்' என்று சோதிடர் கூற, மூடநம்பிக்கையின் மொத்த உருவமான அம்மா - இராணிமேரி கல்லூரியை இடித்துவிட்டு, அங்கு தலைமையகம் கட்ட முடிவுசெய்தார்.

இப்படித்தான் சென்னை - மெரினா கடற்கரை ஓரத்தில் பொற்றொழிற் சிலம்பு ஒன்று ஏந்திய கையளாகப் பாண்டியன் நெடுஞ்செழியன் அரசவையில்...

**"தேரா மன்னா செப்புவது உடையேன்...**
**வாயிற் கடைமணி நடுநா நடுங்க**
**ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத்தான்தன்**
**அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்**
**பெரும்பெயர்ப் புகார் என் பதியே...**
**என் காற்சிலம்பு பகர்தல் வேண்டி, நின்பாற்**
**கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி!**
**கண்ணகி என்பது என் பெயரே"**

எனச் செப்பி மன்னனைச் சுட்டெரிக்கும் கண்களால் விளித்து நீதி கேட்ட கற்புக்கரசி கண்ணகியின் பார்வை ஜெயலலிதாவிற்கு ஆகாது என்று சோதிடர் சொல்ல, அந்தச்



சிலை இரவோடு இரவாக அப்புறப்படுத்தப்பட்டது! இப்போது அந்தச் சிலை சென்னைக் காட்சியகத்தில் தரையில் சாக்குகளால் சுற்றிச் சாய்த்து வைத்திருக்கிறார்கள்.

அம்மாவை வாஸ்து சாத்திரமும், சோதிடமும் படுத்தும்பாடு சொல்லிமாளாது! சோதிடர்களின் பிடியிலேதான் அம்மா ஆட்சி சிக்கியுள்ளது.

'வாஸ்து' சாத்திரம் அண்மைக் காலமாகத் தமிழ்நாட்டு மக்களை பாடாய் படுத்திவருகிறது. தனி மனிதர்கள் வாஸ்துவை நம்பினால் நம்பிவிட்டுப் போகட்டும் என்று விட்டு விடலாம். அவர்கள் தங்கள் பணத்தில் கட்டிய வீட்டை வாஸ்து காரணங்களுக்காக இடித்து, இடித்துக் கட்டிக்கொள்ளட்டும். அது அவர்கள் வீடு, அவர்கள் பணம், அவர்கள் நம்பிக்கை என்று நாம் சும்மா இருந்து விடலாம்.

ஆனால், வாஸ்து சாஸ்திரத்தின் அடிப்படையிலும், சோதிட நம்பிக்கைகளின் அடிப்படையிலும் முதலமைச்சர் ஜெயலலிதா முடிவு எடுப்பதுதான் நாட்டு மக்களுக்கு ஆபத்தாக இருக்கிறது.

ஒரு கதைக்கு அதிபர் புஷ்- ஈராக்குக்கு எதிரான போரில் தோற்றுப்போயிருந்தால், வெள்ளை மாளிகையை இடித்துவிட்டு வேறொரு இடத்தில் அதைக் கட்டுவாரா? அமெரிக்க மக்கள்தான் அதை அனுமதிப்பார்களா?

**கனடாவிலிருந்து நக்கீரன்**

ஆனால், "அம்மா என்றால் நல்லாட்சி" என்று அவரது பக்தர்களால் போற்றி அகவல், நாளும் பொழுதும் பாடும் தமிழ்நாட்டில்தான் கொடுங்கோல் ஆட்சி நடக்கிறது. தமிழ்த் தேசியவாதிகளுக்கு எதிராகப் 'பொடா' சட்டம் ஏவப்படுகிறது. ஏனென்றால் வனவாசம், இம் என்றால் சிறைவாசம் என்பது விதியாக இருக்கிறது. இதற்குக் காரணம், புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதாவிற்குத் திருக்குறளில் - திருவள்ளுவர் செங்கோன்மை, கொடுங்கோன்மை, இறைமாட்சி பற்றியெல்லாம் சொல்லியிருக்கும் அறிவுரைகள் தெரியாமல் இருப்பதே. "அம்மா என்றால் நல்லாட்சி" என்று சும்மா சொன்னால் மட்டும் போதுமா?

✷

## குருகுலம் மாணவர்களுக்கு வகுப்புக்கள் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

வருடப்பிறப்பை முன்னிட்டு எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 12.45 தொடக்கம் 1.58 வரையான சுபவேளையில் குருகுல மாணவர்களுக்கான நாள் வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

இந்துசமய விவகார அமைச்சர் மகேஸ்வரன், யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி கோபால கிருஷ்ண ஐயர், சர்வதேச இந்துமத குருபீடாதிபதி மகேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன குரு மற்றும் இந்து குருமார் ஒன்றியத்தினரும், மாணவர்களின் பெற்றோரும் இவ் வைபவத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதுவரை குருகுலத்தில் சேராத புதிய மாணவர்கள் இத்தினத்தில் தமது விண்ணப்பத்தை வழங்கிப் புதிதாகச் சேர்ந்து கொள்ளலாம் எனவும் - கணினி வகுப்புகள், ஆங்கில வகுப்புகள் என்பனவும் இத்தினத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், விடுதியில் இன்னும் சில வெற்றிடங்கள் மட்டுமே உள்ளதால், விடுதியில் சேரவிரும்பும் மாணவர்கள் உடனடியாகத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## கைகலப்பில் காயம்

மதுபோதையில் தனது குழந்தையைத் தூக்கிக்கொண்டு செல்ல வீட்டினுள் நுழைந்த தந்தைக்கும், மைத்துனருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்புவரை சென்றதில் மைத்துனர் காயமடைந்தார்.

கரணவாய் தெற்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எஸ்.பாரத் (வயது 17) என்பவரே காயமடைந்தார். இவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (23)

## பாலர் பாடசாலையில் ஆங்கில வகுப்பு

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை பாலர் பாடசாலையில் பயிலும் மேற்பிரிவு மாணவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புக்கள் - எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. இந்த முன்பள்ளியில் மட்டுமே இவ்வாறான ஆங்கில வகுப்புக்கள் முதன்முதலாக நடைபெற ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (116)

## கபடிப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் - கபடிப்போட்டி நாளைமறுநாள் புதன்கிழமை காலை 9 மணிக்குப் பருத்தித்துறை சிவன் கோவிலடி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஆண், பெண் போட்டியாளர்கள் பங்குபற்றும் இப்போட்டியில் 28 அணிகள் பங்குபற்றுகின்றனர். (சு)



பக்தாத்தில் சீர்குலைந்துள்ள சிவில் கட்டமைப்பைச் சீராக்கும் முயற்சியில், ஈராக்கிய தலைமைப் பொலிஸ் அதிகாரி அமெரிக்க அதிகாரிகளால் சேவைக்கு அழைத்துச் செல்லப்படும் காட்சி.



தமது காரின் பின்பகுதியினுள் (டிக்கியினுள்) இருந்து தமது வீடுகளுக்குத் திரும்பிச் செல்லும் ஈராக்கியச் சிறுவர்கள்.

# அமெரிக்கா தேடும் ஈராக்கியப் பிரமுகர்கள்

ஈராக்கைக் கைப்பற்றியபோதும், தம்மால் கைதுசெய்யமுடியாமற்போன முக்கிய ஈராக்கியத் தலைவர்கள் 55 பேரைக் கைதுசெய்ய உதவுமாறு கோரி, அமெரிக்க இராணுவம் - ஈராக்கில் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துள்ளது. இப்பிரசுரங்கள், சீட்டு அட்டைகள் (Playing Cards) வடிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. டேர்ட்டி டசின் (Dirty Dozen) என்று அமெரிக்காவால் கூறப்படும் நபர்கள் குறித்த விபரங்கள் இவை:



ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன்



உதயி ஹுசைன் (38 வயதான இவர் - சதாமின் புதல்வர், சதாமின் பதயீன் படைத்தளபதி)



குவாசே ஹுசைன் (சதாமின் 36 வயதான கடைசிப் புதல்வர், விசேட காவற்படைத் தளபதி)



இசாட் டோரி (61 வயதான இவர் - ஈராக் படைகளின் பிரதித் தலைவர்)



தாரிக் அஸிஸ் (67 வயதான இவர் - கிறிஸ்தவர், பிரதிப் பிரதமர்)



ராகா யசீன் ரமதான் (65 வயதான இவர் - உதவி ஜனாதிபதி, இராணுவத் தளபதி)



பர்சான் இப்ராஹிம் அல் திக்ரீதி (உளவுப்படையின் இயக்குநர்.)



முஹமட் ஹம்சா சுபேய்தி (வட ஈராக் பாத் கட்சியின் முன்னாள் தலைவர்)



அபிட் ஹமாவுட் அல் திக்ரீதி (சதாமின் அந்தரங்கச் செயலாளர்)



அசிஸ் சலியா அல்-நுமான் (குவைத்தை ஆக்கிரமித்தபோது ஆளுநராக நியமிக்கப்பட்டவர்)



வட்பான் இப்ராஹிம் (முன்னாள் உளவுத்துறை அமைச்சர்)

# சதாமின் திக்ரிட் நகரம் அமெரிக்கப் படைகளிடம்



சதாம் ஹுசைனின் சொந்த நகரான திக்ரிட்டும் அமெரிக்கப் படையினர் வசமாகியுள்ளது. எந்த எதிர்ப்பும் இன்றி நுழைந்த படையினருக்கு உள்ளூர் வாசிகள் ஆதரவு தருவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேசமயம், கடந்த சனியன்று பக்தாத் வைத்தியசாலை வாயிலில் காவற்பணியில் நின்ற அமெரிக்க மரைன் படைவீரர் ஒருவர் துப்பாக்கிதாரிகள் இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். படையினரின் தாக்குதலில் இவர்களில் ஒருவர் பலியானதாகவும், இவரிடம் சிரிய நாட்டு ஆவணங்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை- ஈராக்கின் தேசிய காங்கிரஸ் தலைவர் அகமட் சலாபி, தனது சுதந்திர ஈராக்கியப் படைகள், பக்தாத்தில் அமெரிக்கப் படைகளுக்கு உதவியாக நிறுத்தப்படும் என்று அறிவித்துள்ளார்.

# காணாமற்போன 7 அமெரிக்கர் வட ஈராக்கில் மீட்கப்பட்டனர்!

ஈராக் போரில் காணாமற்போனதாகக் கருதப்படும் ஏழு அமெரிக்கப் படையினரை, அமெரிக்கத் துருப்புக்கள் வட ஈராக்கில் மீட்டுள்ளதாக அமெரிக்க இராணுவத் தளபதி ஜெனரல் ரொமி பிராங்ஸ் தெரிவித்தார். மேலதிக விபரங்களை வெளியிட மறுத்த ஜெனரல் பிராங்ஸ், பக்தாத்திலிருந்து வடக்கு நோக்கி நகர்ந்த அமெரிக்கத் துருப்புக்களே இவர்களை மீட்டதாகவும் கூறினார்.

இவர்கள் - சுட்டுவீழ்த்தப்பட்ட அப்பாச்சே ஹெலிகொப்ரர் விமானிகளா அல்லது 507 ஆவது விநியோகப் படையணி தாக்கப்பட்டபோது கைது செய்யப்பட்டவர்களா என்பது தெளிவாகவில்லை. மீட்கப்பட்ட படையினர் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் காணப்பட்டனர்.

உலகவலம்

# ஈராக்கில் அமெரிக்க விமானப்படை தனது பலத்தைக் குறைக்கின்றது!



B-2 குண்டுவீச்சு விமானம்

ஈராக் போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, அமெரிக்க விமானப்படை தனது பிரசன்னத்தை அங்கிருந்து குறைத்து வருகிறது. B-2 எனப்படும் நவீனரக குண்டு வீச்சு விமானங்கள், தமது இந்துசமுத்திரத் தளமான டியாகோ கார்சியா தீவுக்குத் திரும்பியுள்ளன. மேலும் மூன்று விமானம் தாங்கிக் கப்பல்களும் வளைகுடாவிலிருந்து திரும்புகின்றன.

விமானப்படையின் உதவி இனி ஈராக் களத்துக்குத் தேவைப்படாது என்பதால், மேலும் சில ஸ்ரெல்த் விமானங்களும், விமானம் தாங்கிக் கப்பல்களும் எதிர்வரும் வாரங்களில் திரும்பவுள்ளன.

ஈராக் போரில் அமெரிக்க விமானப்படை 14 ஆயிரம் தடவை தாக்குதல் நடத்தியுள்ளன. இது - 1991 வளைகுடாப் போருடன் ஒப்பிடுகையில் குறைவானது எனக் கூறப்படுகிறது.

# கைதடி சிறுவர் இல்ல சிறுமி மீதான பாலியல் துஷ்பிரயோகம் உறுதியானது!

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் தங்யிருந்த சிறுமி ஒருவர், பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை நேற்றைய மருத்துவ பரிசோதனையில் உறுதியாகியுள்ளது.

முன்னதாக - கைதடி சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த சிறுமிகள் சிலர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர் எனச் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, கடந்த வெள்ளியன்று நடவடிக்கை எடுத்த பொலிஸார், அங்கிருந்த சிறுமிகளை மீட்டதுடன், அந்தச் சிறுவர் இல்லத்தை மூடி, சீல் வைத்தனர்.

யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட மேற்படி சிறார்களில் நேற்று பரிசோதிக்கப்பட்ட நான்கு சிறுமிகளில், 13 வயதான சிறுமியொருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என மருத்துவப் பரிசோதனை முடிவுகள் தெரிவிப்பதாக



சம்பவம் நடைபெற்ற விடுதிக் கட்டடம்

சாவகச்சேரி குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி ளிக்ஹோகித நமது நிருபருக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - இந்துசமயப் பேரவையின் கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில், பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதாக குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரி ஜி.விமலசிறி தலைமையிலான பொலிஸ் குழுவினர், சிறுவர் இல்லத்தைச் சுற்றிவளைத்தபோது, சிறுமிகள் தங்கியிருக்கும் விடுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் விடுதிப்பொறுப்பாளர் தங்கியிருந்தார்.

இச்சம்பவத்துக்கு உடந்தையாக இருந்தார்கள் என்ற வகையில் சைவச்சிறுவர் இல்ல ஆசிரியரான




கைதடி சைவச் சிறுவர் இல்ல முகப்புத் தோற்றம்

மகாலிங்கம் மனோன்மணி, சிறுமிகள் பகுதிப் பொறுப்பாளர் பேரம்பலம் மகேஸ்வரி ஆகியோருடன் விடுதிப் பொறுப்பாளர் வைத்திலிங்கம் தர்மராஜதுரையும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

36 சிறுமிகள் தங்கியிருந்த விடுதியில் தற்போது 14 சிறுமிகள் விடுமுறையில் வீடு சென்றுள்ளனர். அவர்களுக்கும் மருத்துவப் பரிசோதனை நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக மேலும் தகவல்களைப் பெறும் பொருட்டு, யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி மற்றும் சாவகச்சேரி நீதிவான் ஆகியோர் சம்பவ இடத்துக்கு நேற்று நேரில் சென்றிருந்தனர்.(சு.ரா)



விடுதி பொலிஸாரால் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது. (படங்கள் எவ்.எக்ஸ்.சுதர்சன்)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

**மலேசியா/பிரித்தானியாவில் உயர்கல்வி**

மலேசியாவில் இரண்டு வருடம் பிரித்தானியாவில் ஒரு வருடமும் கல்விகற்று நீங்களும் ஒரு பொறியியலாளராகலாம்.

☆ பாடநெறி ஆரம்பம் மே/யூன் 2003
☆ ஆகக்குறைந்த தகைமை G.C.E (O/L)
☆ பாடநெறிக்கட்டணத்தை இலகுவாக தவணை முறையில் செலுத்தலாம்.
☆ விசா ஒழுங்குகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க.
Far Overseas Educational Consultants
444C 2/1,Galle Road,Ratmalana
யாழ்.தொடர்புகளுக்கு 30 1/1 சிராம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
Tel:- 0777-578059 (வ.கி.மாகாண இணைப்பாளர்)
072-859041
E.Mail:- ecolenviros@ dynaweb.lk (சி-765)

# கஷ்டப் பிரதேச மாணவர்களுக்கு அமைச்சு புலமைப்பரிசில் வழங்கும்

(கொழும்பு)

மனிதவள, கல்வி அபிவிருத்தி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் புலமைப்பரிசில் நிதி வழங்கும் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு மேலும் 12 ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பாக - சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் சுற்று நிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த, கஷ்டப் பிரதேச மற்றும் வசதி குறைந்த பிரதேசப் பாடசாலைகளில் கல்விபயிலும், பொருளாதார கஷ்டங்களின் காரணமாகத் தமது கல்வி நடவடிக்கையை பூர்த்தி செய்யமுடியாத நிலையிலுள்ள மாணவர்களுக்கு- மாதாந்தம் 500 ரூபா வீதம் 10 மாதங்களுக்கு 5000 ரூபா வழங்கப்படவுள்ளது.

**SPOKEN ENGLISH WITH GRAMMER**
LECTURES BY:
**MR. M.A.HARI**
புதிய பிரிவு ஆரம்பம்
16.04.2003 புதன் மாலை 6 மணி
wed / mon 6 p.m - 7 p.m
**HARY'S INSTITUTE**
இல. 564, கஸ்தூரியார் வீதி,
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம். (சி-824)

**தவறிவிட்டது**

12.04.2003 அன்று 764 பலாலி வீதி பயணிகள் மினிபஸ்ஸில் பா.தமிழ்ச்செல்வன் என்பவருக்குச் சொந்தமான பயணப்பை ஒன்று கைமாறி எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. உடைகளும் முக்கிய அலுவலக ஆவணங்களும் அதனுள் இருப்பதனால் அதனை கண்டெடுத்தவர்கள் 026-23310 என்ற திருகோணமலை தொலைபேசி இலக்கத்துடன் அல்லது கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
சன்மானம் வழங்கப்படும்.
'அருணோதயம'
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.
தகவல்:- பா.கிருபாகரன். (சி-844)

யாழ். நகரில் புதியதோர் உதயம் (14-04-03) இன்று முதல்



TERNET BROWSING CENTRE
SECOTE INFORMATION TECHNOLOGIES (PVT) LIMITED
குறைந்த கட்டணத்தில்
INTERNET BROWSING, E-MAIL, NET PHONE, SCANNING, PHOTO COPYING, CD WRITING.
325/1, பரமேஸ்வராச் சந்தி,
பலாலி வீதி, யாழ்ப்பாணம். (311)

## துர்நாற்றம் வீசும் சுன்னாகம் சந்தை

(கந்தரோடை)

சுன்னாகம் மீன், இறைச்சி சந்தையின் கழிவுகள், உரிய முறையில் அகற்றப்படாமல் சந்தைக்கு அருகிலேயே கொட்டப்படுவதால் சந்தைப் பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது.

மீன்வெட்டிய கழிவுகள், இறைச்சிக்காக வெட்டப்பட்ட கோழிகளின் எச்சங்கள் மற்றும் விலங்குகளின் எச்சங்கள் என்பனவே பல இடங்களில் கொட்டப்படுவதனால் சுகாதாரச் சீர்கேடு நிலவுகின்றது. (69)

## மீனவர் நிவாரணம்

(வடமராட்சி)

பருத்தித்துறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகளில், தை மாதத்திற்கான - இடம்பெயர்ந்தோர் மீனவர் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா ஆகிய பொருட்களே வழங்கப்பட்டு வருகின்றன. (23)

## வெலிஓயாவில் ஜெயலத்

வெலி ஓயாவில் உள்ள 233 ஆவது பிரிகேட் தளத்தில் இடம்பெற்ற புதுவருடச் சிறப்பு நிகழ்ச்சியில், அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன கலந்து கொண்டார். அத்துடன், அப்பகுதி மக்களுக்காக மருத்துவ உபகரணங்கள் சிலவற்றையும் அமைச்சர் வழங்கியுள்ளார்.

## கையடக்கத் தொலைபேசி அன்ரனா பொருத்தப்பட்டது

கையடக்கத் தொலைபேசிகளுக்கான அன்ரனா, உசன்-மிருசுவில் பகுதியில் அண்மையில் பொருத்தப்பட்டுள்ளது.

இதனால், இதனை அண்டிய பகுதிகளில் கையடக்கத் தொலைபேசிகளைப் பாவிக்கக் கூடியதாக உள்ளது. முன்னர் இவற்றுக்கு வீடுகளில் தனியான அன்ரனா பொருத்தியே மக்கள் பாவித்து வந்தனர். இம்மாத முற்பகுதியில் இந்த அன்ரனா பொருத்தப்பட்ட பின்னர் முகமாலை, மிருசுவில், உசன், கச்சாய், கொடிகாமம், மீசாலை, சாவகச்சேரி, வரணி போன்ற பகுதிகளில் கையடக்கத் தொலைபேசிகள் சிறப்பாக செயற்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

எனினும், சாவகச்சேரி - கைதடியை அண்டிய பகுதிகளில் மிகக் குறைந்தளவான அலைவரிசையே காணப்படுகின்றது. (25)

# அடுத்த ஆறு வருடங்களுக்குள் 20 இலட்சம் பேருக்கு வேலை

(கொழும்பு)

அடுத்த நான்கு முதல் ஆறு வருடங்களில், 20 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தேசிய முன்னுரிமையைக் கொடுக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முன்னுரிமைத் திட்டம் தொடர்பான அறிக்கை, ரோக்கியோவில் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

# பாக்குநீரிணையில் பாலம் இந்திய அரசு தீவிர ஆர்வம்

இலங்கை-இந்திய நாடுகளிடையே பாலம் நிர்மாணிப்பது தொடர்பாகப் பூர்வாங்க அறிக்கை தயாரிப்பதில் இந்திய அரசு தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

வொஷிங்ரனில் நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்றுள்ள, இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் நாராயண், மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் புகையிரத சேவை அபிவிருத்தி சம்பந்தமாகவும் இந்தியா அக்கறை கொண்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விபத்தில் காயமுற்ற முதியவர் மரணம்

பருத்தித்துறைப் பகுதியில், ஓட்டோவும் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் காயமடைந்த முதியவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மரணமடைந்தார்.

கடந்த வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு, பருத்தித்துறை- கிராமக்கோட்டுச் சந்தியில் இந்த விபத்து இடம்பெற்றது. புலோலி தெற்கு, மந்திகையைச் சேர்ந்த குழந்தைவேலு அம்பலவாணர் (வயது 74) என்பவரே இச்சம்பவத்தில் மரணமடைந்தவராவார்.

மொழிபெயர்ப்பாளரான இவர், சம்பவதினம் - இரவுவேலை முடித்துக் கொண்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தவேளை, ஓட்டோவுடன் விபத்துக்குள்ளாகிக் காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மரணமடைந்தார்.

இவரது சடலம், மரண விசாரணையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (23)

**IIS இன் இதயம் கனிந்த புதுவருட வாழ்த்துக்கள்.** (சி-843)

மாணவர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் IIS இன் இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

IIS | PC Paradise | Sun Computers

**அனைவருக்கும் பொன்னரசியின் புத்தாண்டு வாழ்த்துக்கள்**

இதுவரை காலமும் முல்லைச்சாலை, புதுக்குடியிருப்பில் இயங்கி வந்த

**பொன்னரசி நகையகம்**

தனது சேவையை இல. 76 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஆரம்பித்துள்ளது என்பதை அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

76 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-813)

கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்தும்

தமிழகத்தின் பிரபல பின்னணிப் பாடகியும் தமிழ் இசைப் பாடகியுமான

**ரீ.கே.கலா**

இடம்:யாழ்.வீரசிங்கம் மண்டபம்
காலம்:16.04.2003 (புதன்) பி.பகல் 4.00மணி

தமிழீழ இசைக் கலைஞர்களுடன் இணைந்து வழங்கும்

மாபெரும் தமிழ் இசை மாலை



நமது ஈழநாடு
ராம்கோ சீமெந்து

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.